JESUS REDEEMS MINISTRIES

# பாலியர் உலகம்

மலர்: 12 | இதழ்: 3 | மே 2021 | ஆண்டு சந்தா ₹ 100/-




கரை தட்டிய கப்பலைப்போல முடங்கிப் போனாலும்
மீண்டும் மீட்டு, பாதுகாத்து, தொடர்ந்து ஓட பெலன் தருவார்...

# யெகோவா ஓஸ்

யெகோவா ஓஸ் என்பதற்கு 'கர்த்தர் என் பெலன்' என்று அர்த்தம்

04 வலியிலும் கர்த்தரின் கரம்...

08 கர்த்தர் என் பெலன்

16 போராட்டங்களை எதிர்கொள்...

நிரம்பி வழியும் ஆசீர்வாதம்! 20

சரியா? தவறா? 24












வாலிபர் உலகம்

**இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!**

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டுவரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!**

Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

**சந்தா விவரம்**

**ஆண்டுக்கு 100/-**
**3 ஆண்டுக்கு 200/-**
**ஆயுள் சந்தா 1,000/-**

| | | |
|---|---|---|
| A/c. Name | : | JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : | 054100710400515 |
| BANK | : | TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : | Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : | 000054 |
| IFS CODE | : | TMBL0000054 |
| MICR CODE | : | 627060021 |
| SWIFT CODE | : | TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-220022.
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in



**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ரெக்ஸ் கிளமெண்ட் | ஜிஷ்யா | லீனா அவினாஷ் ரெபேக்கா | ரேச்சல் | கிளாடிஸ் | ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ்
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா







# தலைவாசல்



SUEZ CANAL

*அன்பானஇளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!*

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் உலகத்தையே ஸ்தம்பிக்க வைத்தது கொரோனா என்ற வைரஸ். அதேபோல இந்த ஆண்டு மார்ச் மாதம் 23ம் தேதி Ever given என்ற பெயர் கொண்ட 20,000 TEV Class Container Ship, Suez canal-லில் மாட்டி, உலக வர்த்தகத்தையே ஸ்தம்பிக்க வைத்தது. மலேசியாவிலிருந்து புறப்பட்டு India, Singapore, Indian Oceanயைத் தாண்டி, Red Seaயை கடந்து Suez canal வழியாக செல்லும் போது, (Biggust என்று கூறப்படுகிற) பலத்த காற்று வீசியதால், சற்று வேகமாக சென்று canal-யை கடந்து விடலாம் என்று கப்பலை நடத்தும் போது காற்றின் வேகம் 30 Knot வேகத்தில் அடிக்க, அதாவது ஒரு மணி நேரத்திற்கு 56 km வேகத்தில் காற்று வீச, ஒரு Box type போன்ற Container கப்பல் எதிர்பாராத விதமாய் கரையைத் தட்டி கப்பலின் முன்புறத்திலுள்ள Bulbous Bow கரையிலுள்ள மண்ணில் புதைந்தது. மேலும் காற்றின் வேகம் அதிகரித்ததால் கப்பலின் பின்புறமும் கரையில் ஒதுங்கியது. இதனால் முழு Suez canal அடைக்கப்பட்டு ஒரு கப்பல்கூட போக முடியாத அளவிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த போக்குவரத்து நெருக்கடியால் 400க்கும் மேற்பட்ட கப்பல்கள் ஸ்தம்பித்து போனது. ஒரு பெரிய குழு 6 நாட்கள் இரவு பகலாக போராடி அந்த Ever given Container Shipயை மீட்டனர்.

★ மணல் அள்ளும் இராட்சத இயந்திரங்களை பயன்படுத்தி, கப்பலின் Bowவின் மேல்புறத்திலுள்ள மணல்களை அகற்றினர். மேலும் Dredging இயந்திரத்தை பயன்படுத்தி, கப்பலின் Bow அடியிலுள்ள மணல்களை அகற்றினர். ஏறக்குறைய Bow சுற்றி 30,000 Cubic meter மணல்களை அப்புறப்படுத்தினர்.

★ 14 Tug boatsயை பயன்படுத்தி Container Ship இழுத்தும், தள்ளியும் Suez canalலின் மத்திய பகுதிக்கு கொண்டு வந்தனர்.

★ மேலும் கப்பலின் பளுவை குறைக்க பல சரக்குகளை இறக்கி, கப்பலின் பளுவை குறைத்தனர்.

★ இதற்கு மேலாக இயற்கையின் பேராதரவுடன் வீசப்பட்ட காற்றினால் Suez canalக்குள் தண்ணீர் பாய, அவை மீட்பு பணிக்கு பெரும் ஆதரவாய் இருந்தது என்று கூறுகின்றனர்.

★ இந்தப் போக்குவரத்து பிரச்சனையால் 130 சரக்கு கப் த்பல்கள் ஸ்தம்பித்துள்ளது.

★ இப்படி பல இன்னல்களில் சிக்கிய Ever given சரக்கு கப்பலை மீட்டு, மீண்டும் பயணிக்க உதவி செய்தனர்.

இதேபோல் நம்முடைய வாழ்விலும் சில நேரங்களில், முன்னேற முடியாமல் நம்முடைய ஓட்டம் ஸ்தம்பித்து முடங்கும்போது, எப்படி எழுவது, எப்படி வாழ்வது என்று வாழ்க்கையின் விழிம்புக்கு வந்தது போல் தோன்றலாம்.

**யெகோவா ஓஸ் நம்முடைய தேவன் உங்கள் பெலன்.** அவர் உங்களை பெலப்படுத்தி, எந்த இக்கட்டான சூழலிலும் இருந்து மீட்டு, பாதுகாத்து, தொடர்ந்து ஓட பெலன் தருவார்.

ஒரு Ever given Shipக்கு உதவி செய்ய ஒரு குழு இருக்கும்போது, தேவனின் கடைசி கால எழுப்புதல் பணியில் நியமிக்கப்பட்ட உங்களுக்கு உதவி செய்ய பரலோக சேனையே உண்டு என்பதை மறக்க வேண்டாம். யெகோவா ஓஸ் (கர்த்தர் என் பெலன்) என்று முன்னேறுங்கள், தடைகளை உடைப்பவர், உங்கள் முன்னே போகிறார் ●

கிறிஸ்துவின் பணியில்

*அவினாஷ்*

GULF of SUEZ

சாட்சி தொகுப்பு:
காலேப்

# வலியிலும் கர்த்தரின் கரம்...



சகோ. ஜான் வினோஸ்

**கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, சிறுவயதிலேயே விசுவாசத்தில் வளர்க்கப்பட்ட சகோதரர் ஜான் வினோஸ் அவர்கள் தனது வாலிப வயதில் ஆண்டவரை விட்டு தூரம் போய், தற்கொலை தான் முடிவு என்ற சூழ்நிலைக்கு தள்ளப்பட்ட சகோதரர் மீண்டும் எப்படி ஆண்டவருக்காக எழுந்து ஜொலிக்கிறார் என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாமா?**

**உங்களது சிறுபிராயம் மற்றும் குடும்பத்தைப் பற்றி சொல்லுங்களேன்?**

நான் பிறந்து வளர்ந்தது சென்னை. நான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் தான் பிறந்தேன். என் தாயார் நன்றாக ஜெபிக்கிறவர்கள். எனது அம்மா ஒரு ஆசிரியர், அப்பா மளிகை கடை வைத்திருக்கிறார். சிறுவயதில் வேதம் வாசிப்பு, ஞாயிறு பள்ளிக்கு செல்வது எல்லாமே சரியாக போய்க் கொண்டிருந்தது. ஆலயத்தில் நடைபெறும் எல்லா quiz போட்டியிலும் கலந்து கொண்டு பரிசுகள் பெறுவேன். எனது சிறு வயதிலேயே எனக்கு விசுவாசத்தை கற்றுக் கொடுத்து வளர்த்தார்கள். படிப்பிலும் மற்றும் எல்லாவற்றிலும் நல்ல ஞானத்தை இயேசு எனக்குக் கொடுத்திருந்தார். படிப்பில் முதல் மாணவனாக திகழவும் தேவன் கிருபை செய்தார்.

**விசுவாசத்தில் வளர்ந்தீர்கள்... சிறுவயதில் அந்த விசுவாசம் வரக்காரணம் என்ன?**

சிறுவயதில் எனக்கு காலில் அலர்ஜி மாதிரி வரும். வயதானவர்களின் கால் எப்படி இருக்குமோ அது போல என் கால் இருக்கும். மருத்துவமனையில் போய் சிகிச்சை எடுக்கச் சொன்னார்கள். ஆனால் நான் 5ம் வகுப்பு படிக்கும்போதே என் அம்மாவிடம், நான் ஜெபம் செய்கிறேன், இயேசு எனக்கு சுகம் கொடுப்பார் என்று சொன்னேன். நான் இயேசுவிடம் ஒரு குழந்தையைப் போல மருத்துவமனைக்கு செல்லாமலேயே பூரண குணமடைய வேண்டுமென்று விசுவாசத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு பூரண சுகத்தைக் கொடுத்தார். இயேசுவை அதிகமாக விசுவாசித்தேன். அதன்பிறகு அலர்ஜி எனக்கு வரவேயில்லை. இப்படி என் விசுவாசம் வளர ஆரம்பித்தது.

**விசுவாசத்தில் வளர்ந்த உங்களை சிறுவயதிலேயே ஆண்டவர் அபிஷேகித்து வைத்திருப்பாரே?**

விசுவாசம் எனக்குள் இருந்தாலும் நான் சி.எஸ்.ஐ. பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்டதால் அபிஷேகம் பற்றி அப்போது எனக்குத் தெரியாது. வேதம் வாசிக்க, ஜெபிக்க நன்றாகத் தெரியும். எனது தாயார் எனக்காக ஜெபிப்பார்கள்.

**ஓகே... அதன்பிறகு அபிஷேகம் பெற்றுக் கொண்டீர்களா? எப்படி பெற்றுக் கொண்டீர்கள்?**

என் அத்தை புறஜாதி மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகிறார்கள். அவர்கள் வீட்டில் எல்லா வாரமும் வியாழக்கிழமை ஜெபக்கூட்டம் நடைபெறும். அதில் இரட்சிக்கப்படாத குடும்பங்களிலிருந்து வரும் பெண்களும், அப்போது இரட்சிக்கப்பட்டு வரும் பெண்களும் தான் கலந்து கொள்வார்கள். நானும் என் தம்பியும் சிறுவர்களாக இருந்ததால் அதில் கலந்து கொள்வோம். அக்கூடுகையில் தான் அந்நிய பாஷை, அபிஷேகம், வரங்கள், பரிசுத்த ஆவி போன்ற காரியங்களை அறிந்து கொண்டேன். அபிஷேகத்திற்கு என்ன செய்ய வேண்டுமென்று அப்போது எனக்குத் தெரியாது. அதற்காக ஏக்கத்தோடு கிட்டத்தட்ட 3 வருடங்கள் ஜெபித்தேன். கடைசியாக 10ம் வகுப்பு படிக்கும் போது, ஒரு கூடுகையில் கலந்து கொண்டு ஜெபித்த வேளையில், ஆவியானவர் தெளிவாக உணர்த்தி அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டேன். ஆவியானவர் வரங்களைக் கொடுத்து ஆசீர்வதித்து அனுப்பினார்.



**ஓகே... சிறுவயதில் நன்றாக இருந்தீர்கள், வாலிப வயது வந்தபோது உங்களுக்குள் சில தடுமாற்றங்கள் வந்திருக்குமே, அதை எப்படி மேற்கொண்டீர்கள்?**

அதுதான் இல்லை... நான் 12ம் வகுப்பு முடித்து வீட்டில் தனியாக இருந்திருந்தால் பாவத்தில் விழுவதற்கான அநேக வாய்ப்புகள் இருந்திருக்கும். ஆனால் அந்த விடுமுறை நாட்களில் எங்கள் ஆலயத்திலுள்ள வாலிப ஐக்கிய கூடுகையிலுள்ள அண்ணன் என்னை தினமும் ஒவ்வொரு ஜெபக்குழுவிற்கு அழைத்து செல்வார்கள். அதில் நிறைய கற்றுக் கொண்டேன். இதனால் தனியாக வீட்டில் இருப்பதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. எப்பொழுதும் என்னை busyயாகவே வைத்துக் கொண்டேன். ஆகையால் என்னுடைய வாலிப வயதில் பரிசுத்தமாக வாழ்வதற்கு அந்தக் கூடுகை உதவியாக இருந்தது. அதுமாத்திரமல்ல, அநேக வாலிப கூடுகைகளை நடத்துவதற்கு தேவன் உதவி செய்தார். ஆகையால் தடுமாற்றங்களை மேற்கொள்ள முடிந்தது.

**பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டீர்கள்... கல்லூரிக்கு சென்றிருப்பீர்கள்? உங்களுடைய கல்லூரி வாழ்க்கையிலும் பரிசுத்தத்தை காத்துக் கொள்ள முடிந்ததா?**

ஆண்டவருக்காக அதிகமாக ஓடிக் கொண்டிருந்த என் வாழ்க்கை சிம்சோனைப் போல மாறியது. கல்லூரியில் எனக்கு ஒரு நட்பு கிடைத்தது. நாங்கள் Love என்ற காரியத்திற்குள் போகவில்லை. ஆனால் நாங்கள் நன்றாக பேசிக் பழக ஆரம்பித்தோம். எனக்குள் ஒரு possessiveness இருந்தது. அந்த நபர் எனக்கு மட்டும் தான், நான் அவர்களுக்கு மட்டும் தான், அவர்கள் வேறு யாரிடமும் பேசக்கூடாது, யாரிடமும் நேரத்தை செலவிடக் கூடாது என்ற எண்ணம் எனக்குள் அதிகமாக ஆரம்பித்தது. அவர்கள் வேறு யாரிடமாவது பேசினால் எனக்கு அதிகமாக கோபம் வரும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருநாள் எங்கள் இருவருக்கும் இடையில் மூன்றாவது நபர் வந்தார் என்று கேள்விபட்டதும் என்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நீ Love பண்ணவில்லையே? ஏன் நீ இவ்வளவு கஷ்டப்படுகிறாய்? என்று என் நண்பர்கள் கேட்டார்கள். ஆனால் அந்த வலி எவ்வளவு பெரிய வலி என்று எனக்கு மட்டும் தான் தெரியும். அந்த நேரத்தில், அந்த நபர் தான் உன்னை ஏமாற்றி விட்டார்களே, நீ செத்து போய்விடு என்ற சத்தம் எனக்குள் கேட்டதும், எனக்கு பயம் உண்டாக ஆரம்பித்தது அது மாத்திரமல்ல, என் மகனே என்கிற இன்னொரு சத்தமும் கேட்டது. சிறுவயதிலேயே என்னை ''என் மகனே'' என்ற சத்தம்தான் என்னை அதிகமாக ஓட வைத்தது அந்த நேரத்தில் ஆண்டவருக்காக பெரிய காரியங்களைச் செய்து கொண்டிருந்தேன், அந்த நேரத்தில் ஆண்டவர் என் மகனே என்று சொன்னால் பரவாயில்லை ஆனால் இப்போது என்னுடைய எல்லா சூழ்நிலையும் தெரியும். ஆனாலும் என் மகனே என்று கூப்பிடுகிறாரே என்ற கேள்வி என்னை அதிகமாக பாதித்தது. அவருடைய அன்பு என்னை அதிகமாக உடைத்தது. அந்த நேரத்தில் ஒரு அண்ணனை ஜெபிக்க சொல்லி எனக்காக அவர்கள் ஜெபித்தார்கள். அதன் பிறகு என் வாழ்க்கையில் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் வர ஆரம்பித்தது. என் படிப்பை நன்றாக படித்துக் கொண்டிருந்தேன்.



**மாற்றம் வர ஆரம்பித்தது... அந்த நட்பையும் விட்டு விட்டீர்கள்... அதன்பிறகு கல்லூரி படிப்பை முடித்து உயர் கல்வி படித்தீர்களா? வேலைக்கு முயற்சித்தீர்களா?**

நான் கல்லூரியில் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்ததால் Campus Interview-ல் கலந்து கொண்டேன். நான் அதற்காக எந்த ஆயத்தமும் செய்யவில்லை. ஆண்டவரிடத்தில் உங்களுக்கு என்னை நடத்துவதற்கு தெரியும் என்று ஜெபித்து விட்டு சென்றேன். இரண்டு பெரிய கம்பெனிகளில் எனக்கு வாய்ப்பு வந்தது. இந்த இரண்டு கம்பெனிகளில் நான் எந்தக் கம்பெனியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற சூழ்நிலை வந்தது. நான் Wipro கம்பெனியைத் தேர்ந்தெடுத்து கிட்டத்தட்ட 5 வருடங்களாக பணி செய்து வருகிறேன். நல்ல சம்பளம், நல்ல வேலை கொடுத்து என்னை உயர்த்தி வைத்திருக்கிறதை பார்க்கும்போது, இந்தச் சிறுவயதிலேயே பெரிய பொறுப்பைக் கொடுத்து நிலை நிறுத்தியிருக்கிறார் என்றால் அது ஆண்டவரால் மட்டுமே முடியும்.



வலியின் நிமித்தம் எனக்கு வாலிபர்கள் மீது அக்கறை உண்டு. ஆகையால் வாலிபர்களை பார்த்து அவர்களோடு என்னுடைய வாழ்க்கையின் அனுபவங்களை சொல்வேன். நான் தனிப்பட்ட முறையில் ஒரு தனி வாலிபனோடு அதிகமாக பேசி, அவர்களுக்கு ஆலோசனைக் கொடுத்து அவர்களை வழிநடத்துவதற்கு தேவன் கிருபை செய்து வருகிறார். அதுதவிர Video Editing எனக்கு மிகவும் ஆர்வம். ஆகையால் Christian Short films எடுத்து ஊழியத்திற்கு பயன்படுத்த உதவினார்.

நான் இந்தக் குறிப்பிட்ட ஊழியம் என்று செய்யாமல் எங்கு வாய்ப்பு இருக்கிறதோ அங்கு போய் ஊழியம் செய்வேன். எந்த ஊழியத் தோடும் இணைந்து ஊழியத்தை செய்வேன். அநேக கல்லூரிகளில் இயேசுவை அறியாத வாலிபர்கள் மத்தியில் போய், என்னுடைய சாட்சியை சொல்வதற்கும், கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து அவர்களுக்கு ஆலோசனைக் கொடுக்கவும் பயன்படுத்தி வருகிறார். கிராம ஊழியங்கள் செய்வதற்கும் ஆண்டவர் உதவி செய்து வருகிறார். நான் மெக்கானிக்கல் இஞ்சினியரிங் தான் படித்தேன். ஆனால் நான் இப்பொழுது Software-ல் பணிபுரிந்து வருகிறேன். ஆண்டவருக்காக ஏதாவது ஒன்று செய்ய வேண்டுமென்று, Prayer fragrance என்ற App create பண்ண தேவன் கிருபை செய்தார். இப்படி அநேக தாலந்துகளையும் கிருபைகளையும் கொடுத்து தேவன் பயன்படுத்தி வருகிறார்.

**பெரிய வேலை, நல்ல சம்பளம்... ஆண்டவருக்காக சிறுவயதில் ஊழியம் செய்தீர்கள்? தற்போது என்னென்ன ஊழியங்களைச் செய்கிறீர்கள்?**

நான் சிறுவயதில் கீபோர்டு ஒரு வருடம் படித்தேன். ஆனால் அதற்கு பிறகு நான் அதை பயன்படுத்தவே இல்லை. ஆனால் நான் போகும் Fellowship-ல் keyboardist இல்லை. ஆகையால் எனக்குத் தெரிந்ததை வைத்து அதை வாசிக்க தேவன் கிருபை கொடுத்து, இன்றைக்கு அநேக இடங்களில் தேவன் என்னை பயன்படுத்தி வருகிறார். எனக்கு பாடல் பாடவோ அதைப் பற்றி எதுவுமே தெரியாது. ஆனால் இப்பொழுது பாடல்களை தேவன் கற்றுக் கொடுத்து, அநேக இடங்களில் பாடல்களைப் பாடி ஆராதனை நடத்துவதற்கு தேவன் கிருபை செய்தார். என் வாலிப வயதில் ஏற்பட்ட



**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

வாலிபர்களாகிய நமக்கு பாவம் என்றால் என்ன? என்று நன்கு தெரியும். அதனால் எளிதாக அதிலிருந்து தப்பித்துக் கொள்வோம். ஆனால் பிசாசு தந்திரமுள்ளவன். நான் அனுப்புகிற இந்த Messageல் என்ன தப்பு இருக்கிறது? இந்த வீடியோவை பார்க்கிறதில் என்ன தப்பு இருக்கிறது என்று சொல்லி, சின்ன சின்ன விஷயத்தை காண்பித்து பெரிய பாவத்தில் தள்ளி விடுவதற்கு பிசாசானவன் ஏதுவாக இருப்பான். ஆகையால் முதலாவது இதில் கவனமாக இருங்கள். இரண்டாவது, முடிந்த அளவிற்கு தனியாக இருப்பதை தவிர்த்திடுங்கள். ஆவிக்குரிய நண்பர்களோடு ஐக்கியம் வைத்துக் கொள்ளுங்கள். நல்ல ஒரு வாலிபர் ஐக்கியத்தில் இணைந்து ஜெபியுங்கள். அது உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை இன்னும் வலுப்பெற செய்யும் ●

# உடலினை உறுதி செய்!

டிப்ஸ்:
ஆலன்

### ஏன் எல்லாரும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்?

"உடற்பயிற்சி உடல் நலம் தரும்" என்று சொல்ல கேட்டிருக்கிறோம். சுமார் 60 நிமிட உடற்பயிற்சி உங்களின் செயலாற்றலை அதிகரிக்கச் செய்து நன்றாக உணரச் செய்கின்றது.

### உடற்பயிற்சியின் பலன்கள்

உடல் நலம் மற்றும் மன நலம் பேண உதவுகிறது. நமது உடலில் சில நன்மை தரும் ஹார்மோன்களை சுரக்கச் செய்கிறது. நல்ல தூக்கத்தை தரும். மனஅழுத்தம், தாழ்வு மனப்பான்மை போன்றவற்றில் இருந்து விடுபட உடற்பயிற்சி உதவுகிறது. உடல் எடையை ஆரோக்கிய மானதாக வைக்கவும், ரத்த கொதிப்பு, நீரிழிவு போன்ற நோய்கள் வராமலும், உடல் பருமன் ஆகாமலும் காக்கிறது.

**Aerobic,** Strength training, flexibility training என உடற்பயிற்சியை மூன்று வகைகளாக பிரிக்கலாம்.

Aerobics நமது இதயத் துடிப்பு அதிகமாகவும், மூச்சு வாங்கும்படி செய்யும் உடற்பயிற்சி ஆகும். இதயத்தில் உள்ள தசைகள் வலுப்பெற இது உதவுகிறது. உங்கள் இதயம், நுரையீரல் மற்றும் உடல் முழுவதும் ஆக்ஸிஜனை எடுத்து செல்ல உதவுகிறது.

### குழு விளையாட்டுகள்

குழுவாக இணைந்து (team spirit) செயல்படும் திறனையும் அதிகரிக்கிறது. Aerobic உடற்பயிற்சியை தனியாக செய்யலாம் சைக்கிள் ஓட்டுதல், ஓட்டம், நீச்சல் மற்றும் வேகமான நடைப்பயிற்சி மூலமாக உடலுக்கும் மனதுக்கும் நன்மை தரும்.

### வலுவூட்டும் பயிற்சிகள் (Strength Training)

தசைகளை பயன்படுத்தும் போது, அவைகள் வலுப்பெறும். வலுவான தசைகள் எலும்பு மூட்டுகளை தாங்கி, காயம் ஏற்படாமல் தடுக்கிறது. தசைகள் அதிக கலோரிகளை எரிக்க உதவுகிறது. எனவே தசைகளை வலுவூட்டும் உடற்பயிற்சி கள் அதிக கலோரிகளை எரித்து உடலை கட்டுக்கோப்பாக (Fit) வைக்க உதவுகிறது.

வீட்டிலேயே செய்யக் கூடிய push ups, pull ups, squats போன்ற உடற்பயிற்சிகள் நமது தசைளை வலுப்படுத்த போதுமானதாகும். ஜிம் போன்ற இடங்களுக்கு செல்வதாக இருப்பின் படிப்படியாக கற்றுக்கொள்வது நலம்.

### Flexibility Training

பொதுவாக அனைத்து உடற்பயிற்சியும் உடலை வளைந்து கொடுக்க செய்தாலும், ஒவ்வொரு முறை உடற்பயிற்சி முடிந்ததும் நமது எலும்பு மூட்டுகள் மற்றும் தசைகளை வளைந்து நெளிந்து விடவேண்டும் (stretching). இவ்வாறு செய்தால் காயம் ஏற்படுவதை தவிர்க்கலாம்.



விளையாடும் முன்னர் (warm up) தசைகளை தயார் செய்யும் பயிற்சிகளை செய்வதும், விளையாடி முடித்ததும் (stretching) வளைந்து கொடுத்தலும் நல்லது.

### எந்த உடற்பயிற்சி எனக்கு சரி?

★ நாம் செய்யும் காரியம் நம்மை உற்சாகப்படுத்த வில்லையென்றால், நம்மால் தொடர்ந்து செய்ய இயலாது.

★ நீங்கள் தனித்து சிறப்பாக செயல்படுபவர் என்றால், ஓட்டம், நீச்சல், சைக்கிளிங் போன்ற பயிற்சிகளில் ஈடுபடலாம்.

★ நீங்கள் குழுவாக விளையாடுபவர்கள் என்றால், பள்ளி/கல்லூரி விளையாட்டு அணிகளில் இடம் பெறலாம் மற்றும் நண்பர்களுடன் இணைந்து குழுவாகவும் விளையாடலாம்.

★ உங்களால் எவ்வளவு நேரம் செலவிட முடியும், உங்களது பலம் மற்றும் பலவீனங்களை அறிந்து செயல்படுவது நன்று. பள்ளி/கல்லூரி படிப்பவராக இருந்தால் உங்களது பெற்றோர் மற்றும் உடற்பயிற்சி ஆசிரியரிடம் உங்கள் விளையாட்டு விருப்பங்களை தெரிவியுங்கள். அவர்கள் கொடுக்கும் பயிற்சி, உணவு ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி முன்னேறுங்கள்.

★ உடல் ஆரோக்கியத்திற்காக தினமும் 1 மணி நேரமாவது நடைப் பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

★ இவ்வாறு உடற்பயிற்சி செய்தால் உங்கள் உடல்,உள்ளம் மற்றும் வாழ்விற்கு நன்மை தரும். இன்றே ஏதாவது ஒரு உடற்பயிற்சியை செய்ய ஆரம்பியுங்கள். ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குங்கள் ●

முகப்பு செய்தி: சதீஷ்

# கர்த்தர் என் பெலன்

**மே** மாதம் வந்தாலே பசங்களை கையில் பிடிக்க முடியாது, எப்போதும் பேட்டும், பந்துமாக இருப்பார்கள். ஒரு சிலர் ஒரு வருஷம் முழுவதும் படிச்சாச்சு, மே மாதம் மட்டும் புக் எடுக்கவே கூடாது என்று தீர்மானம் எடுப்பாங்க. இன்னும் கொஞ்சம் பேர் எங்கு போய் ஜாலியா ஊர் சுத்தலாம் என்று Plan பண்ணுவாங்க. ஆனால் இது எல்லாமே கடந்த ஆண்டுகளில் நடந்தது. இந்த வருஷம் School, College படிக்கிற நிறைய பேர் Exam எழுத ரெடியா இருக்காங்க. ஒரு வேளை நீங்க கூட தேர்வுக்காக ஆயத்தமாக இருக்கலாம், அல்லது காலேஜ் முடித்து விட்டு எங்கு வேலைக்குப் போக போகிறோம்? என் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று நிறைய கேள்விகளோடு இருக்கலாம். கவலைப்படாதீர்கள்! தொடர்ந்து படியுங்கள் இந்தப் பகுதி உங்களுக்கு ஒரு புதுபெலனைக் கொண்டு வரும்.



உங்களுக்கு KFC சிக்கன் பிடிக்குமோ பிடிக்காதோ எனக்குத் தெரியாது. ஆனால் அந்தக் கம்பெனி உரிமையாளர் கேணல் ஹார்லாந்து சாண்டர்ஸ் கதை உங்களுக்கு நிச்சயம் பிடிக்கும். 1890ல் பிறந்த இவர் சிறுவயதில் பல தோல்விகளைச் சந்தித்தவர். அவர் முதல் பாதி வாழ்க்கையில் ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலை என மாறி, மாறி செய்தார். நீராவி இரயில் எஞ்சினில் எரிபொருள் நிரப்புதல், காப்பீடு விற்பனை, டயர் விற்பனை, ஓட்டுநர் என பல வேலைகளை தன் வாலிப வயதில் செய்து முடித்தார். 1930ஆம் ஆண்டு தன்னுடைய 40வது வயதில் Kentucky பகுதியில் Shell oil நிறுவனத்தின் உணவகத்தை எடுத்து நடத்தினார். அப்பொழுது தான் பல மூலிகைகள் மற்றும் மசாலாக்களுடன் சமைக்கப்பட்ட "Kentucky Frid Chicken" (KFC) தயாரித்தார். இரண்டு குக்கர், மாவு, மசாலா கலவைகள் போன்றவைகளை அவரின் காரில் எடுத்துக் கொண்டு ஊர் ஊராக சுற்றித்திரிந்து, ஒவ்வொரு உணவகங்களுக்கும் சென்று அவரின் சிக்கன் செய்யும் முறையை விளக்கி விற்பனை செய்ய முயன்றார். ஆனால் அவரின் KFC சிக்கனை விற்பனை செய்ய யாரும் தயாராக இல்லை. 1009 முறை நிராகரிப்புக்கு பிறகு தன்னுடைய 65ம் வயதில் ஒரு உணவகத்திடம் KFC சிக்கன் தயாரிக்கும் உரிமத்தை விற்றார். KFC சிக்கன் சுவையில் மக்கள் மயங்கியதால் உணவகத்தின் எண்ணிக்கை அதிகமானது. தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட இழப்புகள் மற்றும் தோல்விகளைக் கண்டு அவர் பெலன் குறுகி சோர்ந்து போகவில்லை. விடாமுயற்சி, கனவு, நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பு, கடின உழைப்பு இருந்தால் எந்த வயதிலும் சாதிக்கலாம் என்று நிரூபித்து காட்டியுள்ளார்.

உலகளவில் 145 நாடுகளில் 24000 FC கம்பெனிகள் நிறுவப்பட்டுள்ளது. ஒருபக்கம் சரீர பெலவீனம், இன்னொரு பக்கம் நிறைய தோல்விகள், மனதளவில் பாதிப்பு இவற்றையெல்லாம் பார்த்து அவர் சோர்ந்து போக வில்லை. 65 வயதில் ஒரு முதியவர் சாதித்துக் காட்டியிருக்கிறார் என்றால் வாலிபனாக இருக்கிற உங்களால் சாதிக்க முடியாதா? முடியும், "**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி. 4:13)** என்று விசுவாசியுங்கள்.



**சுயபெலன், திறமைகள் மீது நம்பிக்கை வைக்காமல் கர்த்தரை நம்புங்கள்.**

இவ்வுலகில் நாம் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறோம் என்பதைக் குறித்து இயேசு சரியாக கூறியிருக்கிறார். **"...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார்" (யோவான் 16:33).** உங்கள் சுயபெலன், திறமைகள் மீது நம்பிக்கை வைக்காமல் கர்த்தரை நம்புங்கள். அப்பொழுது அவர் உங்களுக்கு பெலனும் இரட்சிப்புமாவார். அவர் உலகத்தின் முடிவு பரியந்தம் உங்களோடு கூடவே இருப்பார். நீங்கள் இந்த உலகில் தனி ஆளாக இல்லை, வானத்தையும் பூமியும் படைத்த ஆண்டவர் உங்களுக்கு பெலனாக இருக்கிறார்.



தாவீதுடைய வாழ்க்கையில் ஒரு முறை அமலேக்கியர் வந்து அவனுடைய மனைவி, பிள்ளைகள் மற்றும் எல்லா உடமைகளையும், சிறியவர்கள், பெரியவர்கள் என ஒருவரையும் விடாமல் சிறை பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். இதைப் பார்த்த தாவீதும் அவனோடு இருந்தவர்களும் அழுகிற தற்கு தங்களுக்கு பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள். மிகவும் நெருக்கப்பட்ட தாவீதோ தன்னுடைய சுயபெலத்தையோ அனுபவத் தையோ நம்பாமல் கர்த்தரை சார்ந்து, **"...தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்" (1 சாமு. 30:6).** பின்பு கர்த்தரிடத்தில் விசாரித்து தேவ பெலனைப் பெற்றுக்கொண்டு அமலேக்கியரை பின்தொடர்ந்து பிடித்து சகலத்தையும் தாவீது திருப்பிக் கொண்டான். இதனால் தான் தாவீது தைரியமாக சொல்கிறார், **"கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்..." (சங்கீதம் 118:14).**

ஆண்டவர் நம்மை பெலப்படுத்துவார். ஆனால் சாத்தானோ நம்மை சோர்வுக்குள்ளாக்குவான். அக்கினியை இறக்கி பாகால் தீர்க்கதரிசிகளை கதிகலங்க பண்ணின எலியா யேசபேலின் வார்த்தையைக் கேட்டு சோர்ந்து போய், **"...சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாக வேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்..."(1இராஜா.19:4)** என்று சொல்லி நித்திரை பண்ணினான். சோர்ந்துபோன எலியாவை கர்த்தர் அப்படியே விட்டு விடவில்லை. தம்முடைய தூதனை அனுப்பி அவரை பெலப்படுத்தினார். அந்தப் பெலத்தினால் எலியா மீண்டும் தன்னுடைய ஊழியத்தைச் செய்ய ஆரம்பிக்கிறார். மனுஷனுடைய வார்த்தைகள் நம்மை சோர்வுபடுத்தும், கர்த்தருடைய வார்த்தையோ நம்மை உயிர்பிக்கும். ஒருவேளை மனிதர்களுடைய வார்த்தையினிமித்தம் நீங்கள் சோர்ந்து போய் இருப்பீர்களானால் கர்த்தருடைய வார்த்தைகள் மூலம் உங்களை பெலப்படுத்திக் கொண்டு இருக்கிறார். **"சோர்ந்து போகிறவனுக்கு அவர்பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிற ஆண்டவர் உங்களோடு இருக்கிறார்" (ஏசாயா 40:29).** சோர்ந்து போகாமல் இருங்கள்.

எனக்கன்பான வாலிபர்களே! தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட இழப்புகள், தோல்விகளைக் கண்டு தாவீது சோர்ந்து போகவில்லை, தனக்கு பெலன் கொடுக்கிற ஆண்டவரிடத்தில் சென்று தன்னை பெலப்படுத்திக் கொண்டான். ஒரு வேளை நீங்கள் என் வாழ்க்கையின் எதிர்காலம் எப்படி இருக்கும்? நான் வெற்றிப் பெறுவேனா? இல்லை, என் வாழ்க்கைப் பயணம் எந்தவொரு முன்னேற்றம் இல்லாமல் இப்படியே இருக்குமோ? என்ற பல கேள்விகளுடன் நீங்கள் இருந்தால் உங்களை பார்த்து ஆண்டவர் சொல்கிறார், ...என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்... (2 கொரி. 12:9) என்கிறார். உங்கள் வாழ்க்கையில் எது உங்களுடைய பெலனாக இருக்கிறது? யோசித்துப் பாருங்கள். நீங்கள் கர்த்தரை மட்டுமே பெலனாகக் கொண்டு இருப்பீர்களானால் தேவன் நிச்சயமாக தம்முடைய கிருபையை கொடுத்து உங்களை பெலப்படுத்தி உயர்த்துவார் ●




**என் பெயர் சேவியர். எனக்கு 25 வயதாகிறது. நான் ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். நான் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆண்டவருக்காக ஊழியம் செய்து வருகிறேன். ஆண்டவர் நிறைய காரியங்களை எனக்கு வெளிப்படுத்தி ஜெபிக்க வைக்கிறார். எனது மாமா மகள் ஆண்டவரை அறியாதவள். அவளை எனக்கு மிகவும் பிடிக்கும். எனவே அவளை திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அவள் நான் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆலயத்திற்கு வருகிறேன் என்று சொல்கிறாள். ஆனால் ஆலயத்திற்கு இதுவரை வந்ததே இல்லை. மாமாவும், குடும்பமும் திருமணத்தை நடத்த மிகவும் வாஞ்சையாகவும் எதிர்பார்ப்போடும் இருக்கிறார்கள். இரட்சிக்கப்படாத பெண்ணை திருமணம் செய்தால் என்னால் ஊழியத்தைச் செய்ய முடியமா? ஆண்டவர் என்னோடு பேசுவாரா? அவளை நான் திருமணம் செய்து கொள்ளலாமா? ஒரு வேளை நான் திருமணம் செய்யாததினால் அந்தப் பெண் தவறான முடிவு எடுத்தால் என்ன செய்வது?**

**- சேவியர், பெங்களூர்.**

அன்பு தம்பி சேவியர்! உங்களின் பிரச்சனை சற்று வித்தியாசமானதும், குழப்பமானதுமாய் இருக்கிறது. ஒரு பக்கம் மாமாவின் மகள், மறுபக்கம் மணவாளன் இயேசு. என்ன செய்வதென்று தெரியாமல் நீங்கள் குழம்பி நிற்பதை உணர முடிகிறது. ஆனால் சேவியர், You have a good News. எப்பொழுது இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டீர்களோ, அப்பொழுதே தேவன் உங்கள் வாழ்க்கையில் அவர் வைத்துள்ள பரிபூரண சித்தத்தையும், திட்டத்தையும் வெளிப்படுத்துவார். “**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்**” **(சங்கீதம் 32:8)** என்று வசனம் சொல்கிறது. அநேக நேரம் என்ன செய்வதென்று தெரியாத நேரங்களில், இயேசுவிடம் கேட்கும்போது அவர் சிறந்த ஆலோசனை தந்து உங்களை சீராக நடத்துவார்.





சேவியர்! ஒரு பக்கம் ஆண்டவரோடு உள்ள உறவில் வரும் சந்தோஷம், மறுபக்கம் உலக உறவில் வரும் இன்பம், இந்த இரண்டில் எதை தெரிந்தெடுப்பது என்பதில் குழம்பி இருக்கலாம். ஒரு பக்கம் குடும்ப உறவுகளின் அழுத்தம், மறுபக்கம் இயேசுவின் உறவில் ஏதாவது விரிசல் ஏற்படுமோ என்ற வருத்தம்.

சேவியர்! நீங்கள் உங்கள் வாழ்க்கையில் எடுக்கும் எந்தத் தீர்மானத்தையும் தள்ளிப் போடலாம், தவறு செய்யலாம், ஏன் தாமதிக்கலாம், ஆனால் வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுக்கும் போது ஒரு சிறிய தவறு செய்தாலும் அது உங்கள் முழு வாழ்க்கையையும்

பாதித்து விடும். எனவே சரியான தீர்மானம் எடுப்பது மிகவும் நல்லது.

## ஒரு வேளை அந்தப் பெண்ணை திருமணம் செய்தால் என்ன விளைவுகள் ஏற்படும்

- ஆரம்பத்தில் ஆலயத்திற்கு வருகிறேன் என்று சொன்னவள், திருமணத்திற்கு பின்னர் என்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம், உங்கள் இயேசுவை நீங்களே பின்பற்றுங்கள், எனக்கு பிடித்தமான வழிபாட்டை நான் செய்கிறேன் என்று சொல்ல வாய்ப்பு உண்டு. ஏனென்றால் 100க்கு 95% இப்படிப்பட்ட காரியம் தான் நடக்கின்றது.

- இதனால் உங்கள் திருமணத்தின் ஆரம்பத் திலேயே ஒரு விரிசலும், குழப்பமும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

- இந்தக் குழப்பமும், பிரச்சனையும் உங்கள் ஆவிக்குரிய உறவை பாதித்து, மேலும் நீங்கள் மிகவும் நேசித்த இயேசுவோடு உள்ள உங்கள் உறவில் ஒரு தொய்வு ஏற்பட வாய்ப்பு உண்டு.

- ஜெப நேரமும், வேத வாசிப்பு நேரமும் குறைவதால், ஆவிக்குரிய வாழ்வில் சோர்ந்து போய், துவண்டு போக வாய்ப்பு உண்டு, ஊழியம் செய்ய நாட்டம் இல்லாமல் போகலாம்.

- எந்தக் குடும்பத்தாரை சந்தோஷப்படுத்த திருமணத் திற்கு ஒப்புக்கொண்டீர்களோ, அவர்கள் அனைவரும் இந்தப் பிரச்சனையைப் பார்த்து, உங்களிடம் கடினமாக பேச வாய்ப்பு உண்டு.

- மேலும் வசனம் சொல்கிறது, "**அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?"(2கொரி.6:14).** வசனத்திற்கு கீழ்ப்படியாத போது ஏற்படும் விளைவுகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படலாம்.

- தவறான தீர்மானம் எடுத்து விட்டதால் என் திரு மணமே சிதைந்து விட்டதே என்று உங்களை நீங்களே நொந்துக் கொள்ளலாம்.

## ஒரு வேளை திருமணம் வேண்டாம் என்று சொன்னால் என்ன நேரிடும்

- உங்கள் குடும்பத்தில் பெரிய குழப்பமும், சண்டை களும், உறவுகளில் பிரிவுகளும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

- நேசித்தப் பெண்ணை மணக்கவில்லையே என்ற வருத்தமும், துக்கமும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

- 2 கொரி. 6:14 என்ற தேவனுடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்தேன் என்ற சந்தோஷமும், அதினால் உண்டாகும் ஆசீர்வாதத்தையும் பெற வாய்ப்பு உண்டு.

- தேவனுக்கு கீழ்ப்படிந்தால் அவரோடுள்ள உறவில் மேலும் பெலப்படவும், அவருடைய வார்த்தையில் வேரூன்றவும் வழிவகுக்கும்.

- கர்த்தருடைய சித்தத்திற்கு காத்திருந்தால் தேவன் முன்குறித்த பெண்ணை திருமணம் செய்ய வாய்ப்பு கிடைக்கும்.



- தேவன் விரும்பும் ஒரு குடும் பத்தைக் கட்டியெழுப்பி தேவனை மகிமைப்படுத்தலாம்.

சேவியர்! மற்றவர்களின் சந்தோ ஷத்திற்காக தேவனை துக்கப்படுத்த வோ, அவருடைய வார்த்தையை மீறவோக் கூடாது.

எனக்குத் தெரிந்த சகோதரி இரட் சிக்கப்படுவதற்கு முன்னால் கிறிஸ்துவை அறியாத ஒரு நபரை நேசித்து பெற்றோர்களால் Engagement-ம் ஆகிவிட்டது. சில நாள் கழித்து அந்த சகோதரி இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் திருமணம் செய்ய போகும் அந்த நபரைப் பார்த்து, ''நீங்களும் இரட்சிக்கப்பட்டு இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் நம் திருமணம் நடக்கும்'' என்பதாக சொன்னார் அந்த நபர் Shockஆகி விட்டார். நீ வேண்டுமானால் இயேசுவை ஆராதித்துக் கொள், நான் உன்னை கட்டாயப்படுத்த மாட்டேன். ஆனால் நான் இயேசுவை ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கு அந்த சகோதரி அந்த நபரை பார்த்து, என்னோடு பரலோகத்திற்கு வர உனக்கு விருப்பம் இல்லையென்றால், உன்னோடுகூட நரகத்திற்கு வர எனக்கும் விருப்பம் இல்லை என்று சொல்லி திருமணம் செய்யவில்லை.

***இன்றைக்கும் நாம் இயேசுவுக்காக இப்படிப்பட்ட ஒரு தைரியமான முடிவை எடுக்கும்போது தேவன் அதை அங்கீகரித்து ஆசீர்வதிப்பார். ஜெபித்து செயல்படுங்கள், தேவ கிருபை உங்களோடு இருப்பதாக!***

# Revival IGNITERS

வாலிபர்கள் தங்களுடைய
ஆவிக்குரிய வாழ்வில் அனல்கொண்டு
எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை
அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து
பெலப்படும் ஓர் இடமாகவும் சினெர்ஜியா கூடுகை
அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று
பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக்
கொண்டு, பிறரையும் பெலப்படுத்த
ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

**Refresh Revive Recharge**

## EVERY 1ST SUNDAY (2nd May)

### VELLORE (3 PM)

Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

### TIRUPUR (4PM - 6:30 PM)

Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road.
9442082200

### TIRUPATI (3PM)

Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

## EVERY 2ND SATURDAY (8th May)

### MADURAI (4:30 - 6:30PM)

Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY (9th May)

### AMBUR (3PM - 6PM)

Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 / 9442885315

### THANJAVUR (3:00PM)

Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

### VILLUPURAM (3 - 6PM)

Jesus Redeems Office Dhanalakshmi Garden Behind Lakshmi Hospital Villupuram .
8344411022 | 9442885315

### KOVILPATTI (3PM – 6 PM)

St. Paul's Matriculation School, Kovilpatti.
9750955548 | 9787322334

### ALANGULAM ( 2:30PM)

P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 / 9750955548

### THENI (2.30PM - 5 PM)

Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

### SURANDAI (2.30PM)

Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

## EVERY 3RD SUNDAY (16th May)

### TIRUNELVELI (2:30 PM)

Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

# எழுப்புதல் அக்கினியை பரவச் செய்வோம்!

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90,1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
22A, Ist Floor, Thennur High Rd.,
Near KMC Bus Stop, Thennur,
9488475315

**JEBAMALAI (2 PM)**
Kadaiyam (via), Keelamathapuram,
(TirunelveliDist).
8300131000 | 9750955548

**MUMBAI (5PM - 8PM)**
Gethsamane Prayer Centre, Bethel, Plot 305/E, Mith ChowkyMarve Road Malad -W. 9004882470 | 9664050567

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road. 9488475315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School, ( Opp: Govt Hospital) Dindugal.
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center, 1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**TIRUVANNAMALAI (3:30 PM)**
A L C Lebanon compound, Near Vijaya Mall, Bye pass Road Corner.
9791444788 | 9865553420

**RANIPET (3 - 6P.M.)**
MBT Road, Navalpur
9500283179 / 9442885315

## EVERY 4TH SATURDAY (22nd May)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
M K Complex 71,
Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY (23rd May)

PERNAMBUT (3 PM - 6 PM)
Revival Prayer Tower, V. Kotta Road, Pernambut, Vellore Dist.
9940854125 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center,No:216, Ist Floor Near Fire Service, Gandhiji Road, Erode. 9750722000

**THIRUVALUR (2.30PM - 5.30 PM)**
Gethsamane Prayer Center, HSR Tower (Near Gowdi Church) Theradi, Thiruvallur.
9442885315


இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
சத்தியம் TV சனிக்கிழமை 6:30am
அதே நேரத்தில் Youtube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்
YouTube
Comforter DIGITAL CHANNEL
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!
9750955547



Revival IGNITERS
WE'RE GOING LIVE
MAY. 30TH
3 TO 5PM - SUNDAY
*Synergia, monthly youth fellowship is telecasted live online in YouTube and Facebook on last sunday of every month*

Message and Prayer: Bro. Mohan C. Lazarus

உண்மை சம்பவம்:
வயலா

# மௌன யுத்தம்



## கேயாசி – 2

இன்றும் கண்ணுக்குத் தெரியாத பல யுத்தம் பல விதங்களில், பல இடங்களில், நாம் அறிந்தும், அறியாமலும், நமக்குள்ளும், நம்மைச் சுற்றியும் நடந்துக் கொண்டு தான் இருக்கிறது. அவற்றுள் ஒன்று எந்த ஒரு காரியம் செய்யத் துவங்கும் போது மனிதனுடைய மனதில், செய்யலாமா? வேண்டாமா? என்ற மனப்போராட்டமே, மௌன யுத்தமாகும். இந்த மௌன யுத்தத்தில், மனச்சாட்சியை மழுங்கச் செய்யும் மனதின் தவறான யோசனைகளுக்கு தன்னை கீழ்ப்படுத்தி தன்னைக் குறித்த தேவ திட்டத்தை அலட்சியமாய் எண்ணிய வேத கதாபாத்திரம் கேயாசியைப் பற்றிக் கீழ் காண்போம்.

தீர்க்கதரிசி எலிசாவின் ஊழியக்காரன் கேயாசியைப் பற்றிய பின்புல தகவல் நமக்கு அதிகம் இல்லா விட்டாலும் தீர்க்கதரிசிகளின் புத்திரர் பள்ளிகள் ஒன்றிலிருந்து இவர் எலிசாவால் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. கேயாசி ஒரு திறமைசாலி, நம்பிக்கையூட்டக்கூடிய ஒருவராக கருதப்படுவதால் வாழ்நாள் முழுவதும் எலிசாவுடன் இறை பணி செய்யும் வாய்ப்பை பெற்றிருந்தார். எலிசா, எலியாவிடம் நேரடியாக கற்றுக் கொண்டது போல, இவரும் எலிசாவுடன் பயணம் செய்யவும், நேரடியாக கற்றுக் கொள்ளும் வாய்ப்புப் பெற்றிருந்தார். கேயாசி அந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி இருந்தால், இஸ்ரவேலின் பிரபலமான தீர்க்கதரிசிகள் பட்டியலில் எலியா, எலிசாவிற்கு பின் கேயாசி இடம் பெற்றிருந்திருப்பார்.

***பின்னணி:*** இஸ்ரவேல் தேசம், தீர்க்கதரிசி எலிசாவின் வீட்டின் அருகில் சீரிய படைத்தலைவனாகிய நாகமான் குஷ்டரோகத்திலிருந்து சுகம் அடைந்து நன்றி செலுத்த எலிசாவிடம் வந்து, எலிசா காணிக்கை வாங்காமல் தட்டுதல் பண்ணியதால் வருத்தத்துடன் திரும்புகையில் கேயாசியின் மனதில் நடக்கும் மௌன யுத்தத்தின் கற்பனை காட்சி இதோ...

♥ பிழைக்கத் தெரியாத மனுஷன். இவருக்கு வேண்டாம் என்றால், வாங்கி எனக்காவது கொடுக்கலாம் அல்லவா?

♥ சே! நாம் இப்படியெல்லாம் நினைக்கக் கூடாது. நாம் என்ன செய்தோம்? அவர் பெரிய தீர்க்கதரிசி தனது அற்புதம் செய்யும் திறனால் படைத்தலைவனை குஷ்டரோகத்திலிருந்து சுகம் அடைய செய்துள்ளார்.

♥ அதனால் என்ன? இவர் கூடவே இருந்து இவர் சொல்வதை எல்லாம் செய்யும் என்னிடம் அந்த விலை உயர்ந்த பொருட்கள் ஏதாவது வேண்டுமா? என்று ஒரு வார்த்தை கேட்கக் கூடாதா? இவருக்கு என்ன பிள்ளைகளா இருக்கிறார்கள்? எனக்கு குடும்பம் இருக்கிறது.

♥ சரி, நாம் நம் எஜமான் மேல் கோபப்பட ஒருவேளை நாம் நம்முடைய தேவைகளை எஜமானனிடம் கூறினால், நமக்காக தேவனை நோக்கி

வேண்டுதல் செய்து, நம்முடைய பொருள் தேவைகள் எல்லாம் சந்திக்கக்கூடும்.

♥ ஆனால் இத்தனை வருடங்கள் எனக் கென்று இவர் ஒன்றுமே செய்யவில்லை. இதற்கு மேலும் செய்யவாப் போகிறார்?

♥ நாம் சற்று பொறுமையுடன் இருக்க வேண்டும், இஸ்ரவேலின் தேவன் வல்லமையுள்ளவர்.

♥ ஐயோ... நாம் தாமதிக்க... தாமதிக்க சீரிய படைத்தளபதி அதிக தூரம் சென்றுவிட்டால் என்ன செய்வது? நாம் விரைந்து சென்று ஏதாவது கிடைப்பதை வாங்கி வந்து விடவேண்டும்.

♥ சீரிய படைத்தலைவன் என்னைத் தவறாக நினைக்கக் கூடாதே.

♥ அதற்கென்ன தீர்க்கதரிசிகளின் புத்திரரில் இரண்டு வாலிபர் வந்து விட்டதினால், அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியையும் இரண்டே இரண்டு மாற்று வஸ்திரங்கள் மட்டும் வாங்கி வரும்படி என் எஜமான் என்னை அனுப்பினார் என்று கூறிவிட்டால், என்னையோ, என் எஜமானையோ யாரும் தவறாக எண்ண மாட்டார்கள். என் எஜமான் என்னை தேடுவதற்குள் விரைந்து சென்று வரவேண்டும். கிடைக்கும் பணத்தில் ஒலிவத் தோப்பையும், திராட்சத் தோட்டத்தையும், சில ஆடு மாடுகளையும் வாங்கிவிடவேண்டும். மேலும் இவற்றை பராமரிக்க சில வேலைக்காரரையும் வாங்கி



விட்டால் போதும் என் குடும்பத்திற்கு தேவையான எண்ணெயும், திராட்சரசமும், பாலும், இறைச்சியும் குறைவில்லாமல் வந்துக்கொண்டே இருக்கும். நான் கவலையே இல்லாமல் என் எஜமானுக்கு ஊழியம் செய் வேன். ஆம் அதுதான் சரியான யோசனை.

அன்பு வாலிபர்களே, எலியாவை பின் தொடர்ந்து எலிசா இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார். ஆனால் எலிசாவை பின்தொடர்ந்த கேயாசியோ இரட்டிப்பான ஆசீர் வாதத்தை இழந்து விட்டார். நாகமான் ஒரு தொழுநோயாளியாக தன் வாழ்க்கையை முடிக்கிறார். காரணம், உன்னத அழைப்பின் உன்னதத்தை உயர்வை உணராமல் அற்ப உலக ஆசீர்வாதத்தை முக்கியப்படுத்தியதே. இன்றும்கூட உங்கள் ஒவ்வொருவரையும் குறித்து மிக மேன்மையான, உன்னத நோக்கத்தை நம் சிருஷ்டிகர்



சிருஷ்டிப்பின் போதே வைத்து விட்டார். உங்களைக் குறித்த உன்னத நோக்கம் நிறைவேறாமல் போக பொல்லாங்கன் பலவித சோதனைகளைக் கொண்டு வருவான்.

**எனவே வாலிப வயதில் தேவனுக்கு முதலிடம் கொடுத்து, வேத வசனங்களை வாசித்து, தியானித்து, ஜெபத்தில் உறுதியாய் தரித்து இருப்பீர்களானால், எப்பேர்ப்பட்ட பொல்லாத வல்லமையாலும் உங்களைக் குறித்த தேவ திட்டம் நிறைவேறாமல் தடுக்க முடியாது ●**

சாதனை: சுமா

# போராட்டங்களை எதிர்கொள்...



**பல தடைகள் நிறைந்த வர்த்தக உலகில் தனது கனவு பாதையில் வந்த தடைகளையும் எதிர்ப்புகளையும் உடைத்து எறிந்து, இன்று 66 பில்லியன் டாலர் வருமானத்தை ஈட்டும் உலகளவில் இருக்கும் ஒரு வர்த்தக சாம்ராஜியத்தை தன் விரல் நுனி கட்டுப்பாட்டில் வைத்திருந்த சாதனையாளரின் வாழ்க்கை உங்கள் பார்வைக்கு!!!**

இந்திரா நூயி 1955ஆம் ஆண்டு அக்டோபர் 28ம் தேதி சென்னையில் பிறந்தார். அவரும் அவருடைய சகோதரியும் குழந்தை பருவத்தில் இருக்கும்போது, அவர்களது தாயார் எப்போதும், வளர்ந்த பின் என்னவாக விரும்புகிறீர்கள் என்று குழந்தைகளைக் கேட்டு சிறந்த பதிலுக்கு பரிசு வழங்குவார். இந்த ஊக்கம் இந்திராவை வளர்ந்தப் பிறகு கடுமையாக உழைக்கத் தூண்டியது. இந்திரா, ஹோலி ஏஞ்சல்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் பயின்றார். பின்னர் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதப் பாடங்களில் இளங்கலை பட்டமும் பெற்றார். இவரது உறுதி மற்றும் விடா முயற்சியால் கல்கத்தாவிலுள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மெண்டில் Post Graduate, MBA பட்டம் பெற்றார். இந்தியாவில் நூயியின் தொழில் வாழ்க்கை ஜான்சன் & ஜான்சன் நிறுவனத்திலும் மேட்டூர் பியர்டுசென் என்ற ஆடை நிறுவனத்திலும் தயாரிப்பு மேலாளர் பதவிகளை வகுத்ததன் மூலம் இவருடைய கனவு நனவாகத் தொடங்கியது. பின்னர் உயர் கல்வி கற்க, சிறிய தொகையுடன் அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு "யேல் ஸ்கூல் ஆஃப் மேனேஜ் மெண்டில்" முதுகலைப் பட்டம் பெற்றார். தனது படிப்பினைத் தொடர போதுமான பணம் இல்லாததால் இந்திரா இரவு முழுவதும் வரவேற்பாளராக பணியாற்ற ஆரம்பித்தார். முதல் இன்டர்வியூவுக்காக தான் கஷ்டப்பட்டு இரவு முழுவதும் போராடி சம்பாதித்தப் பணத்தைக் கொண்டு புதிய ஆடை வாங்கி, அவற்றை தன்னுடைய முதல் இன்டர்வியூவுக்கு அணிந்துச் சென்றார். ஆனால் கணுக்கால் வரைக்கும் அந்த Pant இருந்ததால், அந்த நேர்முகத்தேர்வில் அவர் நிராகரிக்கப்பட்டார். மனம் தளர்ந்த அவர் தன்னுடைய கல்லூரிப் பேராசிரியர்களின் அறிவுரைப்படி தனக்கு வசதியாக உள்ள புடவையை அணிந்து அதே கம்பெனிக்குச் சென்று வேலையைப் பெற்றார்.

இந்திரா தன்னுடைய சிறுவயதில் இருந்தே தான் யார்? தன்னுடைய பலம் மற்றும் பலவீனம் என்ன என்பதை தெளிவாக அறிந்திருந்தார். பிறகு அவர் Boston consulting Group-ல் பணிப்புரியத் தொடங்கினார். இந்திரா தொடர்ந்து தன்னுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய சவால்களைச் சந்திக்க வேண்டியதிருந்தது. முதலில் அவர் ஒரு பெண் என்பதால் அவருடைய மதிப்பை நிரூபிக்க தன்னுடன் பணிபுரியும் ஆண் சகாக்களைவிட அதிகம் உழைக்க வேண்டியதிருந்தது. இரண்டாவது, இந்திரா அமெரிக்கர் இல்லை என்ற இவ்விரு காரணங் களுக்காக அவர் தரத்தில் எவ்வித சமரசமும் இன்றித் தன் சக ஊழியர்களைவிட மிகக் கடினமாக உழைத்தார் இந்திரா. நிரந்தர வேலை, நல்ல ஊதியம் என்று தன்னை தேற்றிக் கொள்ளாமல் தன்னுடைய கனவு நனவாகும் வரை விரைந்துப் போராடத் தொடங்கினார்.









1994ஆம் ஆண்டு உலகின் தலைசிறந்த குளிர் சாதன நிறுவனங்களில் ஒன்றான "பெப்சிகோவில்" சேர்ந்தார். பல்வேறு பொறுப்புகளில் நிறுவனத்திற்கு சேவை செய்து, இடைவிடாத கடின உழைப்பால் 2001ல் பெப்சிகோ நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி மற்றும் தலைவர் ஆனார். மேலும் இவர் இயக்குநர் குழுவிலும் இருந்துப் பணியாற்றத் தொடங்கினார். 12 வருடம் தலைமை செயல் அதிகாரி பதவியை வகித்தார். 24 ஆண்டுகள் பெப்சிகோ நிறுவனத்தில் பணியாற்றினார்.

2007ஆம் ஆண்டு அவர் இந்திய அரசாங்கத்தால் பத்ம பூஷன் விருதை பெற்றுக் கொள்வதற்குத் தேர்வுசெய்யப்படார். 2008ஆம் ஆண்டு அவர் அமெரிக்க கலை மற்றும் அறிவியல் கழகத்தின் Fellowship-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 2016ஆம் ஆண்டிற்கான உலகின் சக்தி வாய்ந்த டாப் 25 பெண்கள் பட்டியலில் 15ம் இடத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் மேல் நிலையை அடைவது ஒரு அமெரிக்கா அல்லாதவர்களுக்கு கடினமான பணி. ஆயினும் அவர் ஒரு மனைவி, ஒரு தாய், ஒரு மகள் மற்றும் ஒரு வெற்றிகரமான பெண்ணாக அனைத்துக் கோணத்திலும் நிரூபித்துள்ளார். ஒரு பெண் அவள் விருப்பத்திற்கு ஏற்றவாறு எதையும் சாதிக்க முடியும் என்று நிரூபித்தவர் இந்திரா நூயி.

இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் கண்டிப் பாக இருக்கும். ஆனால் வெற்றிப் பாதையை அடைய பல்வேறு போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டும்.

***அன்பான வாலிபர்களே! இந்திரா நூயி அவர்கள் இவ்வளவு பெரிய சாதனையை அடைவதற்கு அவர்களின் கடின உழைப்பும், கனவும் தான் காரணம். வாலிபர்களாகிய நீங்களும் இவர்களைப் போல சாதனைப் புரிய வேண்டுமானால் கடினமாக உழையுங்கள், தொடர்ந்து போராடுங்கள், வெற்றி நிச்சயம்!***

## கொரோனா அச்சுறுத்தும் அறிகுறிகள்



**கண்கள் சிவத்தல்:** கண் சிவத்தல், வீக்கம் போன்றவை உருமாறிய கொரோனா வைரஸ் பாதிப்பாக இருக்கலாம்

**அசாதாரண இருமல் :** கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டவர்களும் இருமல் வழக்கமான ஒன்றாக இருக்காது. தொடர்ச்சியான இருமலாக இருப்பதோடு குரலையே அது மாற்றிவிடும்.

**செவித்திறன் குறைபாடு :** செவித்திறன் குறைபாடு ஏற்பட்டால் அது கூட கொரோனாவின் அறிகுறியாக இருக்கலாம்.

**சோர்வு :** கொரோனாவில் இருந்து மீண்ட நோயாளிகள் சோர்வில் இருந்து விடுபடுவதற்கான காலம் 6 மாதங்கள் வரை நீடிக்கும்.

**இதய துடிப்பு அதிகரிப்பு :** இதயத்தில் அழுத்தம் ஏற்படும். இதய துடிப்பின் வேகமும் அதிகரிக்கும்.

**இதுபோன்ற அறிகுறிகள் இருப்பின் தயங்காமல் கொரோனா பரிசோதனை எடுத்து உறுதிபடுத்திக் கொள்வது நல்லது.**



‘‘எழுப்புதலில் பயன்படுத்துவதற்காக 7 விதமான ‘யௌவன’ சந்ததி!’’ (புதிய தலைமுறை)யை எழுப்புவேன்! என்று தேவனாகிய கர்த்தர் வாக்குப் பண்ணியபடி, தமிழ்நாட்டின் எழுப்புதல் திட்டத்தில் பயன்படுத்தப்பட, கடந்த (2021) ஜனவரி மாதத்தில், சுமார் 3,500க்கும் அதிகமான வாலிபர்களை தேவனாகிய கர்த்தர் எழுப்பினார்!

அதைத் தொடர்ந்து, கிழக்கிந்திய மாநிலங்களான ஒரிஸ்ஸா, ஜார்கண்ட், பிஹார், சத்தீஷ்கர், மேற்கு வங்காளம் மற்றும் உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து சுமார் 961 இளம் வாலிபர்கள் நாலுமாவடி–தேவனுடைய கூடாரத்திற்கு வரவழைக்கப்பட்டு, அவர்களுக்கென்று கடந்த (2021) மார்ச் 17,18,19 ஆகிய தேதிகளில், ‘எழுப்புதலைப் பரவச் செய்வோர் பயிற்சி முகாம்!’ (IGNITER'S CAMP–2021) நடத்தப்பட்டது.









# எழுப்புதல் அக்கினியை பரவச் செய்வோம்!











முதன்முதலாக நடத்தப்பட்ட இந்தப் பயிற்சி முகாம்களில் பங்கு பெற்ற இளம் வாலிபப் பிள்ளைகளை தேவனாகிய கர்த்தர் தமது ஆவியினால் விடுதலையாக்கி, தமது வல்லமையினால் அளவில்லாமல் நிரப்பினார்.

எழுப்புதலுக்காக ஜெபிப்பதின் அவசியத்தையும், சுவிசேஷம் அறிவிப்பதின் முக்கியத்துவத்தையும் குறித்து, நமது சகோதரர் மோகன் சி.லாசரஸ் அவர்கள் விளக்கிச் சொல்லி, ஜெபத்திற்குள்ளாக நடத்தியபோது, கலந்து கொண்ட எல்லோரையும் தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜெப ஆவியினாலும், ஆத்தும பாரத்தினாலும் நிரப்பினார்.

தீர்க்கதரிசி, சகோதரர் வின்செண்ட் செல்வக்குமார் அவர்கள், 'தீர்க்கதரிசனத் தலைமுறை!' மற்றும் 'யுத்தத் தலைமுறைகளைக் குறித்து பகிர்ந்து கொண்டு, ஜெபத்தில் நடத்தியபோது, அனேகருடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டது. அனேகர் யுத்த அபிஷேகத்தால் நிரப்பப்பட்டார்கள்! அனேகர் தரிசனங்களைக் கண்டு, சாட்சி சொல்லி, தேவனாகிய கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். மெய்யாகவே தேவனாகிய கர்த்தர் இந்த முகாமில் மகிமையான காரியங்களைச் செய்தார்!

சகோ. அன்மோல் (ஜார்கண்ட்) அவர்கள் பாடல்—ஆராதனை வேளையைப் பொறுப்பெடுத்து நடத்தினார்கள். சகோ. பெராக்கா (பஞ்சாப்) மற்றும் சகோ. ரவி (ஜார்கண்ட்) ஆகியோர் தேவ செய்திகளை இந்தியில் மொழி பெயர்த்து உதவினார்கள்.

இந்த முகாமில் கலந்து கொண்ட வாலிபர்கள் அனைவரும் தேவனாகிய கர்த்தருக்காகப் பிரகாசிக்கத்தக்கதாக, நமது வட இந்திய ஊழியத்தின் ஒருங்கிணைப்பாளராக இருக்கிற, சகோ. வாட்ச்மேன் நீ யோபு அவர்கள் அனைத்துக் காரியங்களையும் ஒருங்கிணைத்து, முயற்சிகளை மேற்கொண்டார்கள்.











செய்தி:
மோகன் சி. லாசரஸ்



# நிரம்பி வழியும் ஆசீர்வாதம்!



**“தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்” (யோவேல் 2:21).** இன்றைக்கு அரசாங்கம் சொல்கிற ஒவ்வொரு அறிவிப்புகளும், சின்ன வியாபாரிகள், தொழில் செய்கிறவர்கள் பாதிக்கப்படக் கூடிய காரியங்களாக இருக்கிறது. ஆகவே தொழில் செய்ய முடியுமா? முன்னேற முடியுமா? நம்முடைய வாழ்க்கை நிலைநிற்குமா? நாம் என்ன செய்வதென்று ஒரு பயத்தோடு இருக்கிறீர்களா? என் மகனே(ளே) இன்றைக்கு தேசத்தில் காணப்படுகிற சூழ் நிலைகளைக் கண்டு பயப் படாதே! மகிழ்ந்து களிகூரு. உங்கள் வியாபாரத்தில், உங்கள் தொழிலில், நீங்கள் கையிட்டு செய்கிற காரியங்களை ஆசீர்வதித்து செழிக்கப் பண்ணுவதற்கு, நான் பெரிய காரியத்தைச் செய்வேன் என்று கர்த்தர் சொல்கிறார்.



## கர்த்தர் என்ன பெரிய காரியத்தைச் செய்ய முடியும்?

**“களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்” (யோவேல் 2:24).** களங்கள் தானியத்தினால் நிரம்பும், ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும். அதாவது நிரம்பி வழிகிற ஆசீர்வாதத்தினால் உங்களை நிரப்பப் போகிறார்.



ஒரு சமயம், ஒரு பட்டணத்திற்கு போயிருந்த போது, அங்கு பெரிய வியாபாரம் செய்கிற ஒரு சகோதரன் அவர்கள் கடையில் ஜெபிக்க வேண்டுமென்று அழைத்துப் போனார். நானும் அந்தக் கடையை ஆசீர்வதித்து ஒரு சின்ன ஜெபம் செய்தேன். நான் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு, அந்தப் பட்டணத்திலிருந்த இன்னொரு வியாபாரம் செய்கிற சகோதரன் எங்கள் கடைக்கு வந்து ஜெபம் பண்ணுங்கள் என்பதாய் அவர் கேட்டுக் கொண்டார்.

அந்தக் கடைக்குள் போனதும், நான் அப்படியே ஸ்தம்பித்து போய் விட்டேன். பொருட்கள் எதுவும் இல்லை, கொஞ்சம் பொருட்களை வைத்து கஷ்டப்பட்டு தொழில் நடக்கிறதை என்னால் நன்கு உணர்ந்து கொள்ள முடிந்தது. ஏன் கடை இப்படி இருக்கிறது என்று கேட்டேன். அதற்கு அவர்கள், வியாபாரத்தில் ஆசீர்வாதமே இல்லை, வியாபாரத்தில் வருமானம் குறைவாக இருப்பதால் பொருட்கள் வாங்கி வைக்க என்னிடம் பணம் இல்லை. ஒவ்வொரு பொருட்களாக விற்று சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு நாள் இந்த பொருட்களை விற்று சாப்பிட முடியும் என்று

# கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்

தெரியவில்லை. மிகவும் கஷ்டமான சூழ்நிலை என்பதாக வேதனையோடு கூட அவர் சொன்னார். களங்கள் தானியத்தினால் நிரம்பும்,ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும் என்று சொல்லியிருக்கிறீர், நிரம்பி வழிகிற ஆசீர் வாதத்தை எங்களுக்கு தாரும். நீர் ஆசீர்வதிக்க வேண்டும், நான் உம்முடைய ஊழியக்காரனாய் இவர்களை ஆசீர்வதித்து ஜெபிக்கிறேன் என்று பாரத் தோடு ஜெபம் பண்ணி விட்டு, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார், பயப்படாதிருங்கள் என்று சொல்லி விட்டு நான் கடந்து வந்தேன். சில மாதங்கள் கழித்து மறுபடியும் அந்த இடத்திற்கு போய் பார்த்தால் நிறைய பொருட்களைப் பார்க்க முடிந்தது. நீங்கள் வந்து ஆசீர்வதித்து ஜெபித்த மாதிரியே கர்த்தர் எங்களை நிரம்பி வழியும்படியாக ஆசீர்வதித்து விட்டார். இன்றைக்கு செழிப்பான வியாபாரத்தைக் கொடுத்தார் என்று மகிழ்ச்சியோடு சொன்னார்கள்.

## நிரம்பி வழிகிற ஆசீர்வாதம் உண்டாக என்ன செய்ய வேண்டும்?

**“கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப் படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்...” (லூக்கா 6:38).** நிரம்பி வழிகிற ஆசீர்வாதம் உங்களுக்கு வேண்டுமானால், நீங்கள் கொடுக்க வேண்டும். நீங்கள் கொடுக்க, கொடுக்க நான்அவர்களை ஆசீர்வதித்து, நிரம்பி வழியும்படி செய்வேன் என்று ஆண்டவர் வாக்குக் கொடுக்கிறார். ஒரு சமயம் ஆந்திர மாநிலத்தில், சின்ன தொழிற்சாலை வைத்து தொழில் செய்யும் ஒரு சகோதரனைச் சந்திக்க நேர்ந்தது. அந்த தொழிற்சாலையில் அநேகர் வேலை செய்கிறார்கள். அவர் சொன்னார், ஐயா! நாங்கள் முதலாவது தொழில் ஆரம்பித்து, ஒரு சின்ன தொழிலுக்கானப் பொருளைத் தயாரித்து, நாங்களே கடை கடையாக வியாபாரம் பண்ணி, மாலையில் போய் பணம் திரட்டிக் கொண்டு வந்து, மறுபடியும் பொருள் வாங்கி, விடியற்காலையில் எழும்பி தயார் பண்ணி, காலையில் கடைக் கடையாக கொண்டு பொருள் விற்போம். அந்தக் காலம் மிகவும் கடினமான ஒரு காலமாக இருந்தது. கொஞ்சம் பணம் குறைந்து விட்டாலும் தொழில் பாதிக்கப்பட்டு விடும். அந்த சமயத்தில் சில ஊழியர்கள் ஜெபிப்பதற்காக வருவார்கள். அவர்களுக்கு 10 ரூபாய்கூட காணிக்கை கொடுக்க முடியாது. ஏனென்றால் அதிலிருந்து 10 ரூபாய் எடுத்தால் நாங்கள் போடுகிற முதல் பாதிக்கப்பட்டு விடும். முதல் பாதிக்கப்பட்டால் தொழில் கொஞ்ச காலத்தில் முற்றிலும் போய் விடும். ஊழியக்காரருக்கு 10 ரூபாய் கூட காணிக்கை கொடுக்க முடியவில் லையே என்று நான் வருத்தப்பட்டிருக்கிறேன்.



சில மாதங்கள் கழிந்தது, ஒரு ஊழியக்காரர் ஜெபிக்க வந்தபோது, அடுத்த நாள் பொருள் வாங்குவதற்கான பணம் தான் இருந்தது. இந்தப் பணத்தில் காணிக்கை கொடுத்துவிட்டால் என்ன செய்ய முடியும் என்று கலங்கி நின்றபோது, முதலாவது ஒரு பங்கை என் ஊழியக்காரனுக்குக் கொடு, நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் சொன்னார். முதன்முதலாக என் தேவைக்கு மத்தியில் அதிலிருந்து ஐம்பது ரூபாய் எடுத்து ஊழியக்காரருக்குக் கொடுத்தேன். அவர் எங்களை ஆசீர்வதித்து ஜெபித்து சென்றார். எப்போது நான் கொடுக்க ஆரம்பித்தேனோ, அது முதல் எங்கள் தொழிலில் செழிப்பு வர ஆரம்பித்தது. தேவனுடைய ஊழியத்திற்கென்று கொடுத்தால் தேவன் அதைப் பெருக பண்ணுகிறார் என்று அறிந்து, தாராளமாக கொடுக்க ஆரம்பித்தேன். வாரத்தில் 1000 ரூபாய் காணிக்கைக் கொடுக்க வேண்டுமென்று வாரத்திற்கு 1000 ரூபாய் கொடுக்க ஆரம்பித்தேன். கர்த்தர் தொழிலைப் பெருகப் பண்ணினார். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு வாரத்திற்கு 20,000 ரூபாய் கொடுக்கக்கூடிய அளவிற்கு கர்த்தர் ஆசீர்வதித்தார். இன்னும் கொஞ்ச நாட்களுக்கு பின்பு, வாரத்திற்கு

**அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடப்படும்.**

30,000 ஊழியத்திற்கு கொடுக்கும்படி கர்த்தர் ஆசீர்வதித்தார். இன்றைக்கு வாரத்திற்கு 50,000 ரூபாய் காணிக்கைக் கொடுக்கும்படி கர்த்தர் என் வியாபாரத்தை செழிக்கப் பண்ணியிருக்கிறார். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடப்படும். நீங்கள் தேவனுக் கென்று கொடுக்க, கொடுக்க, தேவன் அதை நிரம்பி வழியும்படி ஆசீர்வதிப்பேன் என்று வாக்குக் கொடுக்கிறார். "**உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்" (நீதி. 3:9,10)** என்று கர்த்தரே வாக்குக் கொடுக்கிறார். முதற் பலன் கர்த்தருக்கென்றுகொடுத்து விட்டால் உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும். உங்கள் வருயமானங்கள் பெருகும், உன்னுடைய ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும் அதைதான் தேவன் வாக்குப் பண்ணுகிறார்.



மல்கியா 3:10ம் வசனத்தை வாசிக்கும் போது, நீ தசமபாகத்தை என் ஆலயத்தில் கொண்டுவந்து தேவனுடைய ஊழியத்திற்காக அர்ப்பணிக்கும் போது, நான் வானத்தின் பலகணிகளைத்திறந்து, இடங்கொள் ளாமற்போகு மட்டும் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் வாக்குக்கொடுக்கிறார். தேவனுக்கு கொடுக்க, கொடுக்க, தேவன் அப்படி ஆசீர்வதிக்கிறார் என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது.

பேதுரு மீன்பிடிக்கிற வேலை செய்தான். மீனை விற்றுதான் அவனுடைய வாழ்க்கை நடத்த முடியும். ஒருநாள் எந்த மீனும் அகப்படவில்லை. இரவு முழுவதும் விழித்திருந்து பிரயாசப்பட்டு கஷ்டப்பட்டும் ஒரு மீனும் அகப்படவில்லை. தொழிலில் நஷ்டம், உழைப்பெல்லாம் வீணாகி விட்டது, இரவு முழுவதும் கஷ்டப்பட்டும் ஒரு மீன்கூட கிடைக்கவில்லை. இன்றைக்கு என் தேவை எப்படி சந்திக்கப்படும் என்று கலங்கியிருந்த சூழ்நிலையில் இயேசு அவனைச் சந்திக் கிறார். இயேசு அவனை சந்தித்ததும், உன் படகை கொஞ்ச நேரம் எனக்கு தருகிறாயா? நான் அதிலிருந்து பிரசங்கம் செய்ய விரும்புகிறேன். தேவனுடைய ஊழியம் நிறைவேற்றப்பட, சுவிசேஷம் அறிவிக்கப்பட இயேசு நின்று தேவனுடைய வார்த்தை பிரசங்கம் பண்ண வேண்டும் என்று கேட்டார். ஏமாற்றம் தோல்விக்கும் மத்தியிலும், இயேசு நின்று பிரசங்கம் பண்ணுவதற்கு ஒரு பிரசங்க பீடமாக அந்த படகை சில நிமிட நேரம் பேதுரு கொடுத்தான். வெறும் படகை இயேசு நின்று பிரசங்கம் பண்ண கொடுத்ததினால் ஆண்டவர் அவனுக்கு வெறும் படகாக திருப்பிக் கொடுக்கவில்லை. அந்தப் படகு நிரம்பி வழியும்படி மீன்களோடு திரும்பக் கொடுத்தார். நீங்கள் கர்த்தருக்கு கொடுக்கிறதை, கர்த்தர் உங்களுக்கு நிரம்பி வழிகிற ஆசீர்வாதமாய் திரும்ப தருவார். அதுதான் இயேசுவினுடைய சுபாவம்.



*அன்பான வாலிபர்களே! நீங்கள் செய்யும் தொழிலில்,வியாபாரத்தில், ஏன் படிப்பில் கூட ஜெயம் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். ஆனால் நிறைய நேரங்களில் தோல்வி, ஏமாற்றங்கள், நஷ்டங்கள், இழப்புகளினால் கஷ்டப்படுகிறீர்களா? சில நேரங்களில் நீங்கள் எடுக்கிற தவறான தீர்மானங்களினால் ஆசீர்வாதத்தை இழக்க நேரிடுகிறது. அதைக் கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டு ஜெபிக்கும்போது கர்த்தர் இழந்ததை திரும்ப பெற்றுக் கொள்ள செய்வார்* ●

# வேதாகமம புதையல் வேட்டை

புதிர்: ரேச்சல்

**கீழே வேதத்திலுள்ள மக்கள் கீழ்ப்படிந்ததினால் தேவனிடத்திலிருந்து பெற்ற ஆசீர்வாதங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. சரியான நபரோடு பொருத்தி, விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

| | |
|---|---|
| எலியா | இராஜாக்களண்டையில் தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணப்பட்டான். |
| ஆபிரகாம் | அவனிலும் பலவானாயிருந்த சத்துருவின் கைக்குத் தப்புவித்தார். |
| காலேப் | காகத்தின் மூலமாக போஷிப்பிக்கப்பட்டான். |
| நோவா | தேவன் தேசத்திலே அமரிக்கையை கட்டளையிட்ட படியினால் அரணான பட்டணங்களைக் கட்டினான். |
| யோசுவா | இவனுக்கு ஐசுவரியமும், கனமும் மிகுதியாயிருந்தது. |
| எசேக்கியா | எல்லா இராஜ்யங்களையும் சுதந்தரித்துக் கொண்டான். |
| யோசபாத் | திரளான தண்ணீரின் அழிவினின்று காப்பாற்றப்பட்டான். |
| யோய்தா | இவன் சந்ததி வானத்து நட்சத்திரங்கள் போல பெருகிற்று. |
| தாவீது | கர்த்தர் அவன் போகிற இடமெல்லாவற்றையும் அனுகூலமாக்கினார். |
| ஆசா | கானானுக்குள் நுழையும் சிலாக்கியம் பெற்றான். |

**கடந்த மாத விடைகள்**

1. ஆரோன் (யாத். 32:1-5, 22-24)
2. சீஷர்கள் (மத். 8:26)
3. பேதுரு (லூக்கா 22:54-60)
4. கிதியோன் (நியா. 6:25-27)
5. இஸ்ரவேலர்கள் (1 சாமு. 17:21-24)
6. பிலாத்து (யோவான் 19:12-16)
7. ஆதாம் (ஆதி. 3:11,12)
8. ஆபிரகாம் (ஆதி. 12:11-13)
9. யாக்கோபு (ஆதி. 31:17-21)
10. சாமுவேல் (1 சாமு. 16:1,2)

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**


**Jesus Redeems Youth Ministries,**
**Nalumavadi, Thoothukudi Dist - 628 211.**
**Cell: 9750955547 | Tel: 04639- 220022.**
**youth@jesusredeems.org**


பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்

15.05.2021

வேதாகம புதையல் வேட்டையில் பங்குபெறும் ஒரு நபருக்கு குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

கடந்த மாத வெற்றியாளர்

**ஐசக்,**
நாகர்கோயில்

கேள்வி பதில்:
ரேச்சல் செல்வகுமார்

# ஜாதி பார்ப்பது சரியா? தவறா?

**பரிசுத்த தேவனாகிய கர்த்தராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிசுத்த ஜாதியாக அழைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் அன்பின் வாழ்த்துகள்.**



கிறிஸ்தவர்களாகிய நாம் ஜாதி பார்ப்பது சரியா? தவறா? என்று அறிந்து கொள்வதற்காக மட்டுமல்ல, அதை நம்வாழ்வில் கடைபிடிக்கவும் வேண்டுமென்பதே இக்கட்டுரையின் நோக்க மாகும். மற்றபடி யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டுமென் பதல்ல, மாறாக பரலோகம் செல்ல பண்படுத்தப்பட வேண்டு மென்பதே.

தன் ஜாதியின் பேரைக் கூறி அழைப்பதை சிலர் பெருமையாகவும், பகட்டை காட்டும் விதமாகவும், அதே நேரம் சிலர் ஜாதியின் பேரைச் சொல்லி அழைப்பது தன்னை அவமானப்படுத்துவதாகவும், ஜாதி பேர் சொல்லி தன்னை திட்டியதாகவும் நினைக்கின்றனர். ஆனால் வேதத்தின்படி இவை இரண்டுமே மிகவும் தவறான அணுகுமுறையாகும்.

## சபையில் ஜாதி பார்க்கலாமா?

இன்றைய நாட்களில் பல சபைகள் ஜாதி வாரியாக பிரிந்து கிடப்பதும், சில சபைகளில் ஜாதி பார்த்து பழகுவதும், மரியாதைக் கொடுப்பதும் தேவனுக்கு மிகவும் வேதனையளிக்கும் விஷயமாகும். நம் இந்தியாவில் மட்டுமே ஜாதி பிரிவு என்பது ‘இந்து வர்ணாசி ரம்’ தர்மபடி பிரிக்கப்பட்டதாகும். உலகில் மற்ற எல்லாருமே இனவாரியாகவோ, குடும்ப (கோத்திர) வாரியாக வோதான் பிரிந் துள்ளனர்.



கிறிஸ்தவர்களின் நம்பிக்கை பரிசுத்த வேதத்தை அடிப்படையாகக் கொண்டது. அதன்படி நாம் எல்லோருமே தேவனால் உண்டாக்கப்பட்ட ‘ஆதாம்’ என்ற ஒரே மனிதனிலிருந்து உண்டானவர்கள். ஆகவே ஜாதி பாகுபாடு பார்ப்பவர்கள் பரிசுத்த வேதாகமத்தையும், அதை நமக்கருளிய ஒன்றான மெய்தேவனை மறுதலிப்பவர்களாவர்.
யாக்கோபு 2:1–3ம்படி இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை பட்சபாதத்தோடு (ஜாதி பாகுபாடோடு) பற்றிக் கொள்ளாதிருப்பீர்களாக! இதைத் தகாத சிந்தனை என்று வேதம் கூறுகிறது. மேலும் கிறிஸ்து வுக்குள் ஆணென்றும், பெண்ணென்றுமில்லை, யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை (கலா. 3:28) SC என்றும் BC என்றுமில்லை, எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.

மேலும் ஜாதி பார்த்து பழகுபவர்களே! நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அதே அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும். பரிசுத்தமான தேவன் பரலோகம் கொண்டு செல்ல ஜாதி பார்த்து உங்களையும் விட்டு விட்டு சென்று விடுவார் (ஏனெனில், நீங்கள் யூத ஜாதி அல்ல) ஜாக்கிரதை!

### திருமணத்தில் ஜாதி பார்க்கலாமா?

பல பரிசுத்த ஜாதியினர் சபையிலோ, மற்ற எந்த இடங்களிலோ ஜாதி பார்க்காமல் பழகுவார்கள். ஆனால் தனது மகன், மகளின் திருமணத்திற்கு மட்டும் “நம்ம ஆளா பாருங்க” என்று நாசூக்காக ஜாதி பார்ப்பார்கள். இப்படிப்பட்டவர்கள், “ஆபிரகாம் ஈசாக்கிற்கு தன் ஜாதியில் (இனத்தில்) பெண் பார்க்க சொன்னார்”, “ரெபெக்காள் யாக்கோபை தன் இனத்தில் திருமணம் செய்ய அனுப்பினாள்” என்று வக்காலத்துக்கு வசனம் பேசுவர். அவர்கள் தெரிந்து





கொள்ள வேண்டியது, ஆபிரகாமும், ரெபெக்காளும் மற்ற இனத்தாரிடம் பெண் கொள்ளாததற்கு காரணம் அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்களாக இருந்ததால் தானே தவிர ஜாதிபார்த்து அல்ல.

மேலும் ஜாதி பார்த்து எதையும் செய்பவர்கள் இரட்சிக்கப்பட்ட மற்றவர்களுக்குள் இருக்கும் ஆவியானவரை தூஷித்து அவமானப்படுத்து கின்றனர் (1பேதுரு4:14). எனவே மற்ற ஜாதியாக கருதப்படும் இரட்சிக்க ப்பட்டவர்களை ஒதுக்குவது அவர்களுக்குள் வாசம் பண்ணும் ஆவியானவரை தூஷிப்பதாகும். மொத்தத்தில் ஜாதி பார்க்கும் எண்ணம் உள்ளவன் கிறிஸ்தவன் அல்ல. அப்படிப்பட்டவன்(ள்) ‘தேவனுடைய பிள்ளை’ என்று தன்னைச் சொல்லிக் கொள்ள எந்தத் தகுதியுமே இல்லை. மற்ற ஜாதியினரை ஈனமாக பார்ப்பவரை தேவன் அருவருப்பாகப் பார்க்கிறார்.

### இடஒதுக்கீடு (கோட்டா), உதவித்தொகை (ஸ்காலர்ஷிப்) ஜாதியின் அடிப்படையில் வாங்கலாமா?

சிலர் எதற்குமே ஜாதி பார்க்கவோ, தன் ஜாதியை கூறவோ விரும்புவதில்லை, ஆனால் கல்வி உதவித் தொகைப் பெறவோ, இடஒதுக்கீடு மூலம் வேலை வாய்ப்பு பெறவோ தன் ஜாதியை முன்னிலைப் படுத்தி பெற்றுக் கொள்வர். ஜாதி பார்ப்பது என்பது எவ்வித ஆதாயத்தைத் தந்தாலும் அது வேதத்திற்கு புறம்பானதே, தேவனுக்கு அருவருப்பானதே. “தேவனால் தனக்கு கல்வி தொகையையோ, வேலையையோ தரமுடியும் என்ற விசுவாச மில்லாதவர்கள்.” வேண்டுமானால் இதை பெற்றுக் கொள்ளலாம் தவறில்லை. ஆனால் இந்தக் கோட்டா, ஸ்காலர்ஷிப் மூலம் தான் உதவி செய்யும் அளவிற்கு நம் “சர்வ வல்லவர்” ஒன்றும் வல்லமை குறைந்தவர் அல்ல. அவர் ‘யெகோவாயீரே’ ஒன்று மில்லாமையிலிருந்து எல்லாவற்றையும், உண்டாக்கித் தரக்கூடியவர். எனவே எவ்விதத்திலும் ஜாதியை பார்ப்பதோ, பெருமைபட்டு கொள்வதோ, தன் ஜாதியை வைத்து ஆதாயம் பெற்றுக் கொள்வதோ நம்மை படைத்த சர்வ வல்ல தேவனின் ‘பரிசுத்த ஜாதியான’ தேவனே நாம் தரம் தாழ்த்திக் கொண்டதற்கு சமமாகும். சிந்திப்பீர்! உணர்வீர்! தெளிவடைவீர்!

**அன்பான வாலிபர்களே! இன்றைக்கு வாலிபர்களாகிய நீங்கள் இந்த ஜாதி என்னும் கொடிய நோயை இத்தேசத்திலிருந்து அழிக்க உங்களை தான் தேவன் எதிர்பார்த்து நிற்கிறார். வாலிபர்களாகிய நீங்கள் எழும்பினால் தேசத்தை மாற்றலாம்! ●**

# ஜெபக்கையேடு

ஜெபம்:
எஸ்தர்

## குழந்தை திருமணம்

- உலக அளவில் குழந்தை திருமணம் 50% பங்கு வகிக்கும் ஐந்து நாடுகளில் இந்தியா இடம் பெற்றுள்ளதாக யூனிசெப் அறிக்கை தெரிவித் துள்ளது.

- உலகம் முழுவதும் உள்ள பெண்களில் 65 கோடி பேருக்கு குழந்தை திருமணம் நடை பெற்றுள்ளது. இதில் 50% குழந்தை திருமணங்கள்.

- உலகம் முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் 2.50 கோடி பெண் குழந்தை திருமணங்கள் நடை பெற்றுள் ளது. குழந்தை திருமணம் செய்த மூன்று பேரில் ஒருவர் இந்தியாவை சேர்ந்தவர்கள்.

- பெண் குழந்தைகளுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் சுகாதார திட்டங்களை செய்தவன் மூலம் குழந்தை திரு மணங்களை குறைக்க முடியும்.

- பெண் குழந்தைகள் கல்வி பயின்று அறிவுத் திறன் களைக் கூட்டி, விழிப்புணர்வு உண்டாக்க வேண்டும்.



## ஜெபக்குறிப்புகள்

1.தேசத்தில் நடைபெறும் குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட அரசாங்கம் திட்டங்களை செயல் முறைப்படுத்த ஜெபிப்போம்.

2. குழந்தை திருமணங்களை ஒழிக்க கடுமையான சட்டதிட்டங்களை அரசு கொண்டுவர ஜெபிப்போம்.

3. பெண் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் சமுதாய விழிப்புணர்வை கொடுக்கும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, பெண் பிள்ளைகளுக்கு நல்ல ஆலோசனைகள் வழங்கப்பட ஜெபிப்போம்.

4. பெண் குழந்தைகளை பாரமாக நினைத்து பெற்றோர் குழந்தை திருமணத்தை நடத்துகிறார்கள். பெற்றோருடைய மனக்கண்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

5. சிறுவயதில் திருமணம் செய்து கொடுப்பதால் உடல் ரீதியான பிரச்சனைகளை ஏற்படுத்தும் சூழ் நிலைகள் மாற ஜெபிப்போம்.

## திருமணத்தை மீறிய உறவு

- திருமணத்தை மீறிய உறவு வைத்திருக்கும் பெண்களுக்காக வடிவமைக்கப்பட்ட முதல் இணையதளத்தில் இந்தியாவில் மட்டும் சுமார் 10 லட்சம் பயனாளர்கள் உள்ளதாக ஒரு ஆய்வு முடிவு வெளியிட்டுள்ளது.

- திருமணத்தை மீறிய உறவில் இருக்கும் பெண்களில் சுமார் 48% இந்தியப் பெண்கள் தாய்மார்களாக இருக்கிறார்கள்.

- இதில் 78% பேர் நன்கு படித்தவர்கள், 74% பேர் நல்ல பணியில் இருப்பவர்கள் தங்கள் பொருளாதாரம் காரணமாகவும், கணவர் மீதுள்ள அதிருப்திகளால் மனமுடைந்து தங்களது மனம் விரும்பும் வாழ்க்கை முறையை தேர்வு செய்துள்ளதாக ஆய்வில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

- நாகரீக காலத்தில் தங்களை வீட்டை பராமரிக்கும் இயந்திரமாக கணவன்மார்கள் பார்ப்பதை பெண்கள் விரும்பவில்லை. தங்களுடைய உணர்வுகள், ஆசைகள் மதிக்கப்பட வேண்டுமென்று வேறு உறவை தேர்ந்தெடுப்பதாக ஆய்வு கூறுகிறது.

- இந்தியாவில் திருமணமானவர்களில் கிட்டத்தட்ட 56% பெண்கள் தங்கள் கணவரை ஏமாற்றியதாக ஒப்புக் கொண்டுள்ளனர். 25 முதல் 50 வயதிற்குட்பட்ட 1,525 திருமணமான இந்தியர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் 48% பேர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட் டவர்களை காதலிப்பது அதிர்ச்சியை தருவதாக 2020ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வு கூறுகிறது.



## ஜெபக்குறிப்புகள்

1. பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அந்த இணைய தளத்தை மூடவும், 10 லட்சம் பயனாளர்கள் மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

2. திருமணத்தை மீறிய உறவில் இருக்கும் பெண்கள் தவறான உறவு என்பதை உணர்ந்து இதிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

3.படித்து வேலையில் இருக்கும் பெண்கள் இப்படிப்பட்டதான தகாத உறவை ஏற்படுத்தி குடும்பத்திற்கும் குழந்தைகளுக் கும் கெட்டபேர் ஏற்படுத்திக் கொடுக்காமல் குடும்பம் சீரழிவிலிருந்து மீட்கப்பட ஜெபிப்போம்.

4. இந்தத் தகாத உறவினால் குடும்பங் களுக்குள், பிரச்சனைகள் ஏற்பட்டு, குழந்தைகளின் மனநிலைகள் பாதிக் கப்படாமல் தடுக்கப்பட பெண்களின் இருதயம் மாறும்படி ஜெபிப்போம்.

5. திருமணத்தை மீறிய உறவினால் தற்கொலைகள், பிரிவினைகள், கொலைகள் நடைபெறுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

## கொரோனா





சீனாவின் வுகான் நகரில் உருவான கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. கொரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, பிரேசில், இந்தியா, பிரான்ஸ், ரஷ்யா நாடுகள் முதல் 5 இடங்களில் உள்ளன. உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோரின் எண்ணிக்கை 13.52 கோடியைத் தாண்டியுள்ளது. இதுவரைக்கும் 10.88 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர். வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 29.27 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 2.35 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பெறுபவர்களில் 1.02 லட்சத்தும் மேற்பட்டோரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளது. இந்தியாவில் கொரோனா பாதிப்பு 1.3 கோடியைத் தாண்டியுள்ளது.

### ஜெபக்குறிப்புகள்

1. உலகம் முழுவதிலும் பாதிக்கப்பட்டிருக்கும் 13.52 கோடி பேருக்கும் சுகம் உண்டாகவும், இனி யாரும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.
2. கொரோனா தாக்குதலினால் இனி யாரும் மரணம் அடையாமல், எல்லார் மேலும் தேவ பாதுகாப்பும், தேவனுடைய ஆளுகை உண்டாகவும் ஜெபிப்போம்.
3. பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் ஒவ்வொருவரும் நல்ல சுகம் அடையவும் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் இதிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.
4. உலக நாடுகளை தேவன் ஆளுகை செய்து நடத்தவும், கொரோனா வைரஸ் கிருமி செயலிழந்து போகவும் ஜெபிப்போம்.
5. ஜனங்களுக்குள் காணப்படும் பயங்கள் விலகி தன்னம்பிக்கை உண்டாகவும், அலட்சியமாக இருந்து விடாதபடிக்கும் ஜெபிப்போம்.

## வெயிலின் தாக்கம்

- மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை கோடை காலம். இந்த ஆண்டு வழக்கத்தைவிட அதிக வெயிலின் தாக்கம் இருக்கும்.
- வடக்கு, வடகிழக்கு, கிழக்கு மற்றும் மேற்கு இந்தியாவின் சில பகுதிகளில் பகல் வெப்பநிலை இயல்பைவிட அதிகமாக இருக்கும்.
- கோடைகாலம் தொடங்குவதற்கு முன்பே தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெயில் அதிகரித்து விட்டது. எனவே கோடைகாலத்தில் வழக்கத்தைவிட அதிக வெப்பம் இருக்கும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.
- வெயிலின் தாக்கம் சமீப காலமாக அதிகரித்து வருவதால் மாநிலத்தின் ஒட்டு மொத்த மின் தேவை 15 ஆயிரம் மெகாவாட்டை தாண்டியுள்ளது. இது கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் 1000 மெகாவாட் அதிகமாகும்.
- அதிகபட்சமாக 0.71 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் சுட்டெரிக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

### ஜெபக்குறிப்புகள்



1. வெயிலின் தாக்கத்தினால் தேசத்தில் எந்த பாதிப்புகளோ, மரணங்களோ நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.
2. வெயில் அதிகரிப்பதால் எந்த வியாதிகளும் யாரையும் அண்டாமல் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.
3. வெயில் அதிகமாக இருப்பதால் மின்சாரம் அதிகம் கிடைக்கவும், மின்சாரம் உற்பத்தி அதிகரித்து மின்சாரம் தடையில்லாமல் கிடைக்கப் பெறவும் ஜெபிப்போம்.
4. வெயில் அதிகரிப்பால் தண்ணீர் பஞ்சங்கள் தடுக்கப்படவும், நீர் நிலைகளில் தண்ணீர் தடையில்லாமல் கிடைக்கப் பெறவும் ஜெபிப்போம்.
5. விவசாயிகள், ரோடு ஓரங்களில் வேலை செய்யும் மக்கள் வெயில் தாக்கத்திலிருந்து தப்புவிக் கப்பட்டு அவர்களுக்கு ஒரு நல்ல கால சூழ்நிலை உருவாக ஜெபிப்போம்.

தகவல்:
ஜீலியட் கிளார்வின்




# சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்!




நாம் சுவிசேஷத்தின் மேன்மைகளையும் அதை அறிவிப்பதினால் ஏற்படும் விளைவுகளையும் ஒவ்வொரு மாதமும் பார்த்து வருகிறோம். எல்லோராலும் மிகவும் எளிதான முறையில் செய்யக்கூடிய ஒரு உன்னத ஊழியமான "கைப்பிரதி ஊழியம்" (Tracks Ministry) பற்றி இந்த மாதம் பார்க்கப் போகிறோம்.

சாதாரண காகிதத்தில் எழுதப்பட்டுள்ள வரிகளையுடைய கைப்பிரதி ஒன்றினைப் பெற்ற மருத்துவர் அதை கவனமாக வாசித்தார். அதை வாசிக்கும்பொழுதே தேவை நிறைந்த மக்களைக் குறித்த ஆத்தும பாரத்தையும் கர்த்தர் தன்னை ஒரு மருத்துவ மிஷனெரியாக அழைப்பதையும் உணர்ந்து கொண்டார். உடனே தன்னை மருத்துவ மிஷனெரியாக அர்ப்பணித்து இந்திய மக்களுக்காக இறுதிவரை குடும்பமாய் சேவையாற்றி CMC என்னும் புகழ்பெற்ற மருத்துவமனை உருவாக காரணமாய் இருந்த, ஜான் ஸ்கடர் என்னும் மருத்துவ மிஷனெரி ஆவார். ஒரு சிறிய கைப்பிரதி ஒரு நபரின் மாபெரும் அர்ப்பணிப்பிற்கு காரணமாயிற்று. மேலும் நம் இந்திய தேசத்திலும் சமுதாயத்திலும் பெரிய மறுமலர்ச்சியையும் ஏற்படுத்திற்று.



இன்றைக்கு நாமும்கூட நம் அருகில் வசிப்பவர்களுக்கு, கடைக்காரர்களுக்கு, கிராமத்தில் வசிப்பவர்களுக்கு, உடன் பயணிக்கும் நபர்களுக்கு என்று பலதரப்பட்ட மக்களுக்கு இப்படிப்பட்ட கைப்பிரதி மூலம் சுவிசேஷம் அறிவிக்கும்போது, பெரிய விளைவுகளையும் மனமாற்றங்களையும் நாம் காண முடியும். எனவே இந்த உன்னத ஊழியமான கைப்பிரதி ஊழியத்தை செய்ய முன்வாருங்கள்.

இதன் மூலம் அநேக ஆத்துமாக் களுக்கு சுவிசேஷம் அறிவித்து அவர்களை இயேசுவண்டை கொண்டு வரலாம்.

**கைப்பிரதி ஊழியத்தில் நாம் கவனிக்க வேண்டிய சில முக்கியமான ஒழுங்குகள்**

- கைப்பிரதி கொடுக்கப்போகும் முன் ஆயத்த ஜெபம் செய்துவிட்டு செல்வது நல்லது. (இதைப் பெறப் போகும் ஒவ்வொரு ஆத்துமாவின் இரட்சிப்பிற்காகவும் உங்களுடைய பாதுகாப்பிற்காகவும் ஜெபித்துவிட்டு சென்றால் ஆத்தும அறுவடையைக் காண முடியும்).
- இயேசுவே இரட்சகர், இயேசுவே மெய்யான தெய்வம், இயேசு நல்லவர், உங்களின் பிரச்சனைகளுக்கு பரிகாரி இயேசுவே, இயேசு உங்கள் நோயை குணமாக்குவார், உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும், இதுபோன்ற தலைப்புகளில் கைப்பிரதிகளை கொடுப்பது நல்லது.
- உங்கள் சபையின் உபதேசங்களைக் குறித்த கைப்பிரதிகளைக் கொடுப்பதை தவிர்க்கலாம். மேலும் மற்ற மார்க்கத்தினரை குறை சொல்லுகிற, கடிந்து கொள்ளுகிற மாதிரியான கைப்பிரதி களைக் கொடுப்பதைத் தவிர்க்கலாம்.
- கைப்பிரதி கொடுக்கும்போது அதை எதிர்ப்பவர்கள் ஏதாவது குதர்க்கமாக கேள்வி கேட்டால் புன் முறுவலோடு உங்களுக்குத் தெரிந்த சரியான விளக்கங்களை அவர் களுக்கு சொல்லலாம்.
- அதற்கு மேலும் கேள்வி கேட்டால், 'எங்கள் ஆலயத்திற்கு வாருங்கள் உங்களுடைய எல்லா கேள்விகளுக்கும் பதில் கிடைக்கும்' என்று அன்புடன் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு உடனே கடந்து சென்றிடுங்கள்.

**"சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" (1 கொரி. 9:16).**

***கைப்பிரதிகளோடு சுவிசேஷம் அறிவிக்கக் கடந்து செல்வோம்! தேசத்தில் அதின் மகிமையான விளைவுகளைக் காண்போம்!***



# எஸ்றா

**தேவாலயத்தை திரும்பக் கட்டுதலும் மக்களை முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வருதலும்**

**அன்பான இளம் நெஞ்சங்களே! ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வேதாகமப் புத்தகங்களைக் குறித்த பல சுவாரஸ்யமான விஷயங்களை அறிந்து வருகிறோம். இந்த மாதமும் சரித்திர நூல்களில் பத்தாவது நூலான எஸ்றா குறித்து சுருக்கமாக காணலாம்.**

## அறிமுகம்

இஸ்ரவேலின் 13 கோத்திரத்தாரான யூதர்கள் தாய்நாடு திரும்புதலும், ஆலயத்தை மீண்டும் எழுப்பிக் கட்டுதலும் பிற இனத்தவரிடமிருந்து பிரிவதில் ஏற்பட்ட சிக்கல்களும் இதில் கூறப்பட்டுள்ளன.

## ஆசிரியர்

இப்புத்தகத்தின் முதல் பகுதி முன்னோர் எழுதி வைத்தக் குறிப்புகளின் தொகுப்பு (1-6). அடுத்தப்பகுதியான (7-10) எஸ்றா எழுதினார் என நம்பப்படுகிறது.

அதிகாரங்கள்: 10
வசனங்கள்: 280
வார்த்தைகள்: 27,441
முக்கிய நபர்கள்: கோரேஸ் ராஜா
எஸ்றா (ஆசாரியன், வேத பாரகன்)
யோசுவா (பிரதான ஆசாரியன்)
செருபாபேல்.

## எஸ்றா சுருக்கம்

முன்னிருந்த நிலைக்கு வருதல்: செருபாபேலின் கீழ் எருசலேமுக்கு முதல் வருகை

- கோரேஸ் ராஜாவின் ஆணை (1:1-11 அதி.)
- மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (2:1-70 அதி.)
- ஆலயப் பணியைத் துவங்குதல் (3:1-13 அதி.)
- எதிர்ப்பு (4:1-24 அதி.)
- ஆலயக் கட்டுமானத்தைப் புதுப்பித்தல் (5:1,6-12 அதி.)
- ஆலய பிரதிஷ்டைப் பண்ணப்படுதல் (6:13-22 அதி.)

## எஸ்றாவின் ஊழியம்

எருசலேமுக்கு வருதல் (7,8 அதிகாரங்கள்)
ஜனங்கள் பரிசுத்தப்படுதல் (9,10 அதிகாரங்கள்)

## எஸ்றாவில் கிறிஸ்து

தாவீதின் குமாரனாகிய மேசியாவிற்காக வம்சத்தைக் காக்க தாவீதின் உடன்படிக்கையையும், வாக்குத்தத்தங்களையும் காக்கும்படிக்கு மக்களை திரும்ப சொந்த நிலத்திற்குக் கொண்டு வந்ததன் மூலம் தேவன் தன் வாக்கை இப்புத்தகத்தின் மூலம் நிறைவேற்றினார்.

சிறப்புக் கட்டுரை:
ரவி

# நான் எங்கேப் போகிறேன் 4

**கிறிஸ்தவ கண்ணோட்டம் என்ற தொடரில், கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் உலகளாவிய கண்ணோட்டத்தின் (Christian World view) அடிப்படைக் கேள்விகளான;**

**1. நாம் எங்கிருந்து வந்தோம்? (What is my Origin?)**

**2. என் வாழ்க்கைக்கு அர்த்தம் எப்படி வருகிறது? (What gives meaning to my life?)**

**3. நான் நன்மை தீமையை எப்படி பகுத்தறிகிறேன்? (How do I differentiate between Good & Evil?) என்பதான மூன்று கேள்விகளை ஆழமாக பார்த்தோம்**

**இம்மாதக் கட்டுரையில் நான்காவதும், கடைசியுமான நான் எங்கேப் போகிறேன்? (What is my Destiny?) என்ற கேள்வியைக் குறித்து ஆராயப் போகிறோம்.**

நான் இந்தத் தொடர் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல, மேற்கூறிய 4 கேள்விகள் தான் ஒரு மனிதனுடையகண்ணோட்டத்தை உருவாக்குகிறது. உலகத்தில் ஏராளமான மதங்கள் உண்டு. இந்த மதங்களைச் சார்ந்தவர்கள்ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய மதப்போதனைகளின் அடிப்படையில் இந்த 4 கேள்விகளுக்கும் பதில் இருக்கும். சில மதங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கொடுக்க முடியாது.

இதில் கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், இந்த நான்கு கேள்விகளுக்கான பதில்களை நீங்கள் தனித்தனியாக பார்த்தாலும், சேர்த்துப் பார்த்தாலும், அந்தப் பதில்கள் எதார்த்த நடைமுறையோடு ஒத்துப்போக வேண்டும். இல்லையென்றால், அக்கண்ணோட்டம் சத்தியத்தின் அடைப்படையிலானதல்ல. இக்காரியத்தை மனதில் வைத்துக் கொண்டு, நான்காவது கேள்விக்கான பதிலைப் பார்ப்போம்.

நம் எல்லோருக்கும் இருக்கும் பொதுவான ஓர் கேள்வி இது. நான் மரித்தப்பின்பு எங்கே போகிறேன்? (Where do I go after I Die?) உலகில் வாழும் எல்லாரும், குறைந்தபட்சம் ஒரு முறையாவது, இக்கேள்வியைக் கேட்டிருப்பார்கள். அதற்கு காரணமும் உண்டு. நம் எல்லோருக்கும் ஓர் உள்ளார்ந்த பண்பு உண்டு. அது என்னவென்றால், தன் வாழ்வில் நடக்கும் எல்லாக் காரியங்களும் தாங்கள் திட்டமிட்டபடியே நடக்க வேண்டும் என்று முயற்சிப்பார்கள். (Basically, we humans always like to be in Control of what is happening to & around us) உதாரணமாக, சிலர் 21 வயதில் வேலையில் சேர வேண்டும், கார் வாங்க வேண்டும், வேலையில் மேலான பதவிக்கு வரவேண்டும், 28 வயதில் திருமணம் செய்ய வேண்டும், 30 வயதில் சொந்தமாக வீடு வாங்க வேண்டும் என்றெல்லாம் திட்டமிடுவார்கள். திட்டமிடுவது மிகவும் நல்ல ஒரு பண்பு. அதை நாம் அனைவரும் பின்பற்ற வேண்டும். அதே நேரத்தில், சில காரியங்கள் நமது கட்டுப்பாட்டில் இருக்காது. உதாரணமாக, பல பேர் தாங்கள் போட்ட திட்டங்களெல்லாம் இந்தக் கொரோனா வைரஸால் பாழானதை நாம் கண் கூடாகப் பார்த்தோம்.



இவ்வாறான பண்பைக் கொண்டிருக்கும் மனிதர்களாகிய நம்முடைய கட்டுப் பாட்டில் முற்றிலும் இராத ஓர் கேள்விதான், “மரணத்திற்கு பின்பு எனக்கு என்னவாகும்?”இந்தக் கேள்விக்கு பல பதில்களை

என்னுடைய உரையாடல்களிலும், பொது வெளியிலும் நான் கேட்டிருக்கிறேன். சிலர் “அதைப் பற்றி எனக்கு கவலையில்லை, வாழும் இந்தப் பொழுதுதான் முக்கியம் ஆகவே மகிழ்ந்திரு” என்பார்கள். ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள், “இந்தப் பிறவிக்கு பிறகு நான் இன்னொரு பிறவி, அதன்பிறகு இன்னொரு பிறவி என்று வாழ்க்கை சுழன்று கொண்டே இருக்கும்” என்பார்கள். நாத்திகர்கள் (Atheists) “மரணமே முடிவு, அதன்பிறகு ஒன்றும் இல்லை” என்பார்கள். இந்தப் பதில்களை நீங்கள் கவனமாக சிந்தித்துப் பார்த்தால், இவைகள் பூரணமானவைகள் அல்ல. இவைகள் பெரும்பாலும், அவர்களுடைய அறியாமையை பிரதிபலிக்கிறது.

வேதம், என்ன பதில் கொடுக்கிறது என்று பார்போம். நம்முடைய வேதம் நித்தியத்தைக் குறித்து மிகத் தெளிவாகவும், அழுத்தமாகவும் கூறுகிறது. தேவனுக்கு நம்முடைய மரணம் முடிவு அல்ல. அவருக்கு நாம் என்றும் ஜீவனோடே இருக்கிறோம். “**அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது**” **(எபிரெயர் 9:27)** என்று வேதம் சொல்கிறது. ஆகவே, இருப்பது ஒரு பிறவிதான் நண்பர்களே. பின்பு நியாயத்தீர்ப்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே மனிதர்கள் நாம் செய்த நன்மை தீமையின் கணக்கை தேவனுக்கு ஒப்புவிக்க வேண்டும். ஆம் நண்பர்களே, சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இந்த உலகத்தில் பலர் மனப்பூர்வமாக தீயச் செயல்கள் செய்து தங்களைப் பிடிக்க யாருமில்லை என்கிற தைரியத்தில் தங்கள் தீமைகளை அடுக்கிக்கொண்டே போகிறார்கள். இவர்கள்வயதாகி மரித்துப்போய், மரணத்திற்குப் பின்பு வாழ்க்கை இல்லை என்கிற பட்சத்தில், இவர்கள் தங்கள் தீமைகளுக்கு பதில் சொல்லாமலே சுகமாய் வாழ்ந்து மரித்துப் போவார்களே. அப்படியென்றால், யார் வேண்டுமானாலும் என்ன தீமையும் செய்து விட்டு தப்பித்துக் கொள்ளலாமே. தேவனுடைய பார்வையில் அது சரியல்லவே, தேவன் நீதியுள்ள தேவனாய் இருக்கிறார். அவர் பார்வையில் இருந்து தீயவர்கள் (மனப்பூர்வமாய் தீமை செய்கிறவர்கள்) யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. அதே நேரம், அவருடைய கிருபாதார பலியாய் பூமிக்கு வந்த இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராகவும், கர்த்தராகவும் ஏற்றுக் கொண்டு இறுதிவரை உண்மையுள்ள சீஷனாக வாழ்கிறவர்கள், இயேசுவோடு நித்தியமாக பேரின்ப வாழ்வில் வாழ்வார்கள் என்றும், அவரைப் புறக்கணித்து தொடர்ந்து பாவமும், தீமையும் செய்கிறவர்கள் பிசாசுக்காக உருவாக்கப்பட்ட காரிருளில் நித்தியமாக தள்ளப்படுவார்கள் என்று வேதம் கூறுகிறது.



***ஆகவே, என் அன்பு வாலிபர்களே! மரணம் முடிவு அல்ல. அது நம் நித்திய வாழ்விற்குள் புகும் நுழைவாயிலுக்குள் கொண்டு செல்வது, கிறிஸ்தவம் மாத்திரமே என்று இந்தக் கேள்விகளுக்கான பதில்களை எந்த முரண்பாடுகளும் இன்றி வழங்குகிறது. அதின் அடிப்படையில் கிறிஸ்தவக் கண்ணோட்டமே சத்தியத்தின் அடிப் படையில் இருக்கிறது என்று சொல்லலாம்*** ●

## கோடை காலத்தை சமாளிக்க:



- ☆ அலுவலகத்திற்கு செல்பவர்கள் சீரகத் தண்ணீரை பருகினால் வெப்பத்தினால் ஏற்படும் தொந்தரவில் இருந்து தப்பிக்கலாம்.
- ☆ தினமும் 3 லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்.
- ☆ நொறுக்கு தீனிக்கு பதில் வெள்ளரிப்பிஞ்சு, திராட்சை உட்பட பழங்களை சாப்பிடலாம்.
- ☆ பகல் நேரங்களில் இளநீர், மோர், பழச்சாறு, எலுமிச்சைசாறு குடிக்கலாம்.
- ☆ பொரித்த உணவுகளை சாப்பிட வேண்டாம்.
- ☆ கோடைகாலத்தில் மூன்றுவேளையும் வயிறு முட்ட சாப்பிடக்கூடாது.
- ☆ வெயிலுக்கு ஏற்ற காட்டன் ஆடைகளை அணிந்து கொள்வது நல்லது.
- ☆ வெளியே செல்லும்போது குடையும், தண்ணீரும் உடன் கொண்டு செல்வது அவசியம்.
- ☆ காரம் நிறைந்த உணவு பொருள்களை தவிர்ப்பது நல்லது.
- ☆ கருப்பு நிற ஆடைகளை தவிர்ப்பது அவசியம்.

எச்சரிப்பின் செய்தி:
சதீஷ்

# இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்!

எனக்கு பிரியமான வாலிபர்களே, நீங்கள் ஒவ்வொரு மாதமும் தவறாமல் இயேசுவின் வருகையைக் குறித்த அடையாளங்களை அறிந்து கொண்டு அவரின் வருகைக்கு ஆயத்தமாகி வருகிறீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். இந்த மாதமும் இயேசுவின் வருகைக்கு முன் இந்தப் பூமியில் நடந்து கொண்டிருக்கும் இன்னொரு முக்கியமான அடையாளத்தைக் குறித்து பார்க்கப் போகிறோம் தொடர்ந்து படியுங்கள்.

## மிருகத்தின் 666 முத்திரை




பகுதி: 7

எனக்கு பிரியமான வாலிபர்களே, நீங்கள் ஒவ்வொரு மாதமும் தவறாமல் இயேசுவின் வருகையைக் குறித்த அடையாளங்களை அறிந்து கொண்டு அவரின் வருகைக்கு ஆயத்தமாகி வருகிறீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். இந்த மாதமும் இயேசுவின் வருகைக்கு முன் இந்தப் பூமியில் நடந்து கொண்டிருக்கும் இன்னொரு முக்கியமான அடையாளத்தைக் குறித்து பார்க்கப் போகிறோம் தொடர்ந்து படியுங்கள்.

நம்முடைய வேதாகமத்தில் சில எண்களுக்கு அடையாளப் பூர்வ அர்த்தமுள்ளது. உதாரணமாக ஏழு என்ற எண் தேவனுடைய பார்வையில் "முழுமை" அல்லது "பரிபூரணத்தை" குறிப்பதற்கு பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய படைப்பின் வாரம் ஏழு நாட்களைக் கொண்டது. ஒரு நாளில் ஆண்டவர் தமது படைப்பின் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றுகிறார் (ஆதி. 2:3). ஆனால் 6 என்பது 7யை விட ஒரு இலக்கம் குறைவுபடும் எண்ணாகும், இது தேவனுடைய பார்வையில் குறைவுபட்ட ஒன்றிக்கு பொருத்தமான அடையாளமாக சொல்லப்படுகிறது. வெளிப்படுத்துதல் 13ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட 666 என்ற எண்ணின் பொருள் "கொடுவிலங்கு எண்" (Number of the Beast) என்பதாகும். இது மிருகத்தின் முத்திரை என்றும் சொல்லப் படுகிறது. இந்த மிருகத்தின்



முத்திரையை உடையவர்கள் மிருகத்திற்கு தொண்டு செய்வதை வெளிப்படையாகக் காட்டுகிறார்கள். இந்த முத்திரை வலது கையில் இருந்தாலும் சரி, நெற்றியில் இருந்தாலும் சரி, இதைப் பெற்றிருப்பவர்கள் பிசாசின் ஆளுகைக்குள் கடந்து போவார்கள். இன்றைய காலத்தில் பிசாசானவன் வாங்குகிறதிலும், விற்பனை செய்வதிலும் தினமும் இந்த இலக்கத்தை “Barcode” மூலம் இரகசியமாக மக்கள் மத்தியில் பயன்படுத்துகிறான்.

பார்கோடு (Barcode) என்பது குறிப்பிட்ட பொருள்களின் மீது அதைப் பற்றிய சில தகவல்களைக் அறிந்து கொள்ளப் பயன்படுத்தப் படுவதாகும். இந்தப் பார்கோடு முறையானது 1948ஆம் ஆண்டு அமெரிக்காவின் பெர்னார்டு சில்வர் மற்றும் நோர்மன் ஜோசப் உட்லேண்ட் ஆகியோரது முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்டது. சூப்பர் மார்கெட்டில் ஆரம்பித்து Amazon வரை நாம் வாங்கும் எல்லா பொருள்களிலும் இந்தப் பார்கோடு System பயன் பாட்டில் உள்ளது. பொதுவாக பார்கோடுகளில் மேலிருந்து கீழாக அச்சிடப்பட்டிருக்கும் கோடுகளின் இறுதியில் அதற்கு ஈடான மதிப்பு எழுதப்பட்டிருக்கும். பார்கோடு மொழியில் இரட்டைக் கோடு என்பது ‘6’ என்ற எண்ணைக் குறிக்கும் பார்கோடு அனைத்திலும் மூன்று முறை இந்த இரட்டைக் கோடுகள் வருவதைக் காணலாம். அதாவது 6-6-6 இவ்வாறு மூன்று முறை அச்சிடப்பட்டிருக்கும். ‘6’ என்ற கோடுகளில் அதன் மதிப்பெண்ணான ‘6’ இடம் பெற்று இருக்காது. இன்னும் உங்களுக்கு புரியும்படி சொல்ல வேண்டுமானல் அந்த மூன்று இரட்டைக் கோடுகளும் மற்ற கோடுகளின் அளவைவிட சற்று நீளமாக இருப்பதைக் காணலாம்.




வெளிப்படுத்துதல் 13ல் சொல்லப்பட்டபடி, “**...அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக் கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு**” **(வெளி. 13:18).** இன்று இந்தியாவிலும் உலகத்தின் பெரும்பாலான தேசங்களிலும் சிறு வணிகங்கள் முடக்கப்பட்டு, பெரும் வர்த்தகர்கள் எழும்பி பெரிய மால்களை உருவாக்கி இருப்பதை நம் கண்கூட பார்த்துக் கொண்டுத்தான் இருக்கிறோம். சமீப வருடங்களில் நாம் பயன்படுத்தும் Online வர்த்தகம், Online Shopping, Paytm, Google pay இவையெல்லாம் பண பரிமாற்றத்தை முடக்கி அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கு இந்த உலகத்தை ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது. ஏனெனில் அந்திக்கிறிஸ்துவின் நாட்களில் பண பரிமாற்றம் நிறுத்தப்பட்டு, மக்கள் அனைவரும் அவர்கள் பெரியவர்களாக இருந்தாலும் சரி, சிறியவர்களாக இருந்தாலும் சரி, ஏழைகள் மற்றும் செல்வந்தர்களாக இருந்தாலும், அடிமைகள் மற்றும் சுதந்தரமானவர்களாக இருந்தாலும் “அடையாளக்குறி” இல்லாமல் வாங்கவோ, விற்கவோ முடியாது. அந்த அடையாளம் என்பது மிருகத்தின் பெயர் அல்லது எண்ணாகும். புரிந்து கொள்ளக்கூடிய அறிவுள்ளவன் எவனும் அம்மிருகத்தின் எண்ணை புரிந்துக் கொள்ள முடியும். அந்த எண் ஒரு மனிதனின் எண்ணாகும், அவனது எண் 666 ஆகும்.

*எனக்கன்பான வாலிப தம்பி, தங்கச்சி! இந்த உலகம் அந்திக்கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கலாம், ஆனால் அதற்கு முன்பாக இயேசுவின் வருகை இருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள். ‘இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது (வெளி. 22:12). எனவே உங்களை பரிசுத்தம் பண்ணிக் கொண்டு இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுங்கள்*●

அடுத்த மாதம் இன்னொரு அடையாளத்தைக் குறித்து பார்க்கலாம், தொடர்ந்து படியுங்கள்.

# செய்திகள்!

### கொரோனா சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும்

## ரெம்டெசிவிர் மருந்து ஏற்றுமதிக்கு தடை

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்தப் படும், 'ரெம்டெசிவிர்' மருந்தை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு தடை விதித்துள்ளது.




நாடு முழுவதும் கொரோனா வைரஸ் 2 அலை கடுமையாக தாக்கி வருகிறது. இதனால், பாதிப்பும் பலியும் நாளுக்கு நாள் கணிசமாக உயர்ந்து வருகிறது. ஏற்கனவே, நாட்டின் பல்வேறு மாநிலங்களில் கொரோனா தடுப்பூசிக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கொரோனா பாதித்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படும், 'ரெம்டெசி விர்' மருந்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 2வது அலையின் தாக்கம் அதிகமாக இருப்பதால், அதிகளவிலான நோயாளிகள் சிகிச்சைக்கு வருவார்கள் என்ற கணிப்பில் தனியார் மருத்துவமனையில் இதை அதிகளவில் வாங்கி பதுக்கி விட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. கடைகளில் ரூ.800 முதல் ரூ.1000 வரை விற்கப்படும் இந்த மருந்துக்கு, தனியார் மருத்துவமனைகளில் நோயாளிகளிடம் இருந்து ரூ.4,500 வரை வசூலிக்கப்படுகிறது.

இந்நிலையில், இந்த மருந்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு நேற்று (ஏப்ரல் 11) தடை விதித்தது. இது தொடர்பாக அது வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்தியாவில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. ஏப்ரல் 11ம் தேதி நிலவரப்படி, நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 11.08 லட்சமாக உயர்ந்துள்ளது. வரும் நாட்களில் இந்த பாதிப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இதனால், ரெம்டெசிவிர் மருந்துக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால், இதன் ஏற்றுமதிக்கு மறு உத்தரவு பிறப்பிக் கப்படும் வரையில் தடை விதிக்கப்படுகிறது' என கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த 'ஜிலீட் சயின்சஸ்' என்ற நிறுவனத்தின் கண்டுபிடிப்பான 'ரெம்டெசிவிர்' மருந்தை இந்தியாவை சேர்ந்த 7 மருந்து நிறுவனங்கள் ஒப்பந்த அடிப்படையில் தயாரித்து வருகின்றன. இவை மாதத்துக்கு 38.80 லட்சம் மருந்தை தயாரிக்கும் திறனை பெற்றுள்ளன.

**பதுக்கலை தடுக்க கண்காணிப்பு**

மத்திய அரசு தனது உத்தரவில் மேலும், 'ரெம்டெசி விர் மருந்தை தயாரிக்கும் இந்திய நிறுவனங்கள், தங்கள் மருந்தின் விநியோகப்பாளர்கள், கையிருப்பாளர்களின் முழு விவரத்தையும் தங்களின் இணையதளத்தில் தெரிவிக்க வேண்டும். இந்த மருந்து கையிருப்பு வைப்பதில் முறைகேடுகள் நடப்பதையும், பதுக்கப்படுவதையும், கள்ளச் சந்தையில் விற்கப்படுவதையும் தடுக்க, அரசு அதிகாரிகள், மருந்து ஆய்வாளர்கள் அடிக்கடி ஆய்வுகள் நடத்தி, கண்காணிக்க வேண்டும்' என கூறப்பட்டுள்ளது.

தினகரன் – ஏப்ரல் 12

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

நிகழ்வு:
ஜீலியட் கிளார்வின்

# வேதமும் விஞ்ஞானமும்

## சமுத்திர கரையின் உண்மை






உங்களில் அநேகர் சமுத்திர கரையில் (Seashore) போய் நின்று சமுத்திரத்தைக் கவனித்திருப்பீர்கள். தூரத்தில் நின்று பார்க்கும்போது, சமுத்திரம் நமது தலையைவிட உயரத்தில் காணப்படுவதையும், அலைகள் கொந்தளித்து வரும்பொழுது அவை நம்மேல் புரண்டு வந்துவிடும் போலவும் தோன்றும். ஆனால் அவ்வலைகள் நம் காலடியில் சாதுவாக வந்து விட்டுத் திரும்பிப் போவதைப் பார்க்கும்போது இவ்வலைகள் ஏன் நம்மீது புரண்டு வரவில்லை என்று நமக்குள் எண்ணம் தோன்றும்.

சில நேரங்களில் சூறாவளிக் காற்றினால் சமுத்திரம் கொந்தளித்து கரை புரண்டு அதிக சேதத்தை விளைவித்தாலும், அச்சூறாவளி அமர்ந்தபின் சமுத்திரம் கொந்தளிப்பை அடக்கி பழைய நிலைக்கே வந்துவிடும்.

சமுத்திரம் இதே அளவில் எப்படி அடங்கிக் கிடக்கிறது என்பதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க மனிதர் (விஞ்ஞானிகள்) முயற்சித்தும் இன்னும் சரியான விடையினை அவர்களால் கண்டுக்கொள்ள முடியவில்லை.

ஆனால் இதற்கான விடையை நம் கையில் கொடுக்கப்பட்டிருக்கும் வேதாகமத்தில் பார்க்க முடிகிறது. "இம்மட்டும் வா, மிஞ்சி வராதே..." (யோபு 38:11) என்ற ஆண்டவரின் கட்டளைப்படியே சமுத்திரத்தின் நீரானது கரைமட்டும் வந்து திரும்பிப்போய் விடுகிறது. மேலும் "உன் அலைகளின் பெருமை இங்கே அடங்கக் கடவது" என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்க, சமுத்திரமானது அதற்கு அப்படியே கீழ்ப்படிந்து நடக்கிறது.

நம் ஆண்டவரின் கட்டளைக்கு இன்றுவரை கீழ்ப்படியும் சமுத்திரக் கரையினைப் போல அவர் வார்த்தைக்கு என்றும் கீழ்ப்படிய நீங்கள் உங்களை அர்ப்பணிப்பீர்களா? ●

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25-04-2021.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

# அன்னையர் தினம்
## மே - 9



நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் இவ்வளவு உயர்ந்து வந்திருப்பதற்கு அம்மா என்ற உறவு பக்கபலமாக இருந்திருப்பார்கள். நமக்கு நல்ல குணநலன்களைக் கற்றுக் கொடுத்து, நமது துயரங்களையும் துடைத்து வாழ்க்கையை உயர்த்திய பெருமை நம் தாயையே சாரும். அத்தகைய அம்மாவை மகிழ்விக்க சில ஆலோசனைகள்...

### வீடியோ தயாரியுங்கள்

உங்கள் தாயாரின் வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத சிறப்பான நிகழ்வுகள், குழந்தை பருவ புகைப்படங்கள், திருமண புகைப்படங்கள், குடும்ப புகைப்படங்களை சேகரித்து அவற்றை கோர்வையாக்கி, அதில் அவர்களுக்கு பிடித்த இசையையோ, அல்லது பாடல்களையோ சேர்த்து ஒரு வீடியோ தயாரித்து பரிசாகக் கொடுக்கலாம்.

### கற்றுக் கொடுங்கள்

உங்கள் தாயார் ஏதாவது ஒன்றை கற்றுக் கொள்ள ஆசைப்பட்டிருக்கலாம் (ஸ்கூட்டி ஓட்டுவது, கணினி படிக்க, ஆங்கிலம் கற்றுக்கொள்ள) அதை அறிந்து அவர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம். இதனால் அவர்களுடைய ஆசை நிறைவேறின பெருமிதத்தை அவர்கள் முகத்தில் பார்க்கலாம்.

### நினைவுகளை உருவாக்குங்கள்

உங்களுடைய தாயார் சந்தோஷமாக இருக்கிறார்களா என்பதை அவர்களோடு உட்கார்ந்து பேசி அறிந்து கொள்ளுங்கள். ஒருநாள் அவர்களோடு தனித்திருந்து பேசி அவர்களுடைய ஆசைகள் மற்றும் விருப்பங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

### உறவுகளை இணையுங்கள்

உங்கள் தாயாரின் வாழ்க்கையில் அவர்களுடைய சகோதர, சகோதரிகள் மற்றும் நெருங்கிய தோழி, அல்லது தோழன் ஏதோ ஒரு காரணத்தினால் பிரிந்து சென்று பேசாமல் இருந்தால் அந்த உறவைத் தேடிக் கண்டுபிடித்து உறவை இணைத்து வைக்கலாம்.



### கவனித்துக் கொள்ளுங்கள்

இத்தனை நாட்கள் உங்கள் தாய் அனைத்து வேலைகளையும் செய்திருப்பார்கள். அன்னையர் தினம் அன்று அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதோடு, சமைத்து கொடுத்து உணவு பரிமாறி சாப்பிட வைக்கலாம்.

### ஏதாவது கற்றுக் கொள்ளுங்கள்

நம் அம்மாவிற்கு ஏதுவுமே தெரியாது என்று நிறைய தடவை பேசி இருப்போம். ஆனால் அவர்கள் நிறைய கலைகள் மற்றும் அறிவுப்பூர்வமான காரியங்களைத்தெரிந்து வைத்திருப் பார்கள். நன்றாக சமைப்பவர்களிடம் சமையல் கற்றுக் கொள்ளுங்கள். இசையில் ஆர்வம் உள்ளவர்களிடம் இசையை கற்றுக் கொள்ளலாம். ஏதோ ஒன்றை உங்கள் தாயிடமிருந்து கற்றுக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

இந்த அன்னையர் தினம் ஒருநாள் கொண்டாட்டமாக இருந்து விடக்கூடாது. அவர்கள் செய்த தியாகத்திற்காக நீங்கள் பரிசு கொடுக்க வேண்டாம். அவர்களுடைய வாழ்க்கையை சிறப்பாக மாற்ற முயற்சி செய்து, இந்த அன்னையர் தினநாளில் அன்பும், பாசமும் அதிகரிக்கட்டும். உறவு அழகாகட்டும். எல்லா அன்னையருக்கும் எங்களுடைய அன்னையர் தின வாழ்த்துக்கள்!●